# பண்ணுக்கு ஒரு பாடல்



'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணுக்கு ஒரு பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் பிற நூல்கள்.. .. ..

| | | | |
|---|---|---|---|
| i. | பஞ்சாமிர்தம் | சிறுவர் நாடகங்கள் | 2015 |
| ii. | சட்டத்தின் திறப்புவிழா | வானொலி நாடகங்கள் | 2016 |
| iii. | பஞ்சாயுதம் | நாடகங்கள் | 2017 |
| iv. | மனவைரம் | வானொலி நாடகங்கள் | 2018 |
| v. | வண்டல் மண் | சிறுவர் இலக்கியம் | 2018 |
| vi. | விதை | நாடகங்கள் | 2019 |
| vii. | பொக்கிசம் | சிறுவர் இலக்கியம் | 2020 |
| viii. | சுமை | நாடகங்கள் | 2021 |
| ix. | மொக்குள் | கவிதை | 2022 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணுக்கு ஒரு பாடல்

பண்ணிசை ஆசிரியர்
**திருமுறைக்கலாநிதி, முனைவர்**
**திருஞான. பாலச்சந்திர ஓதுவா மூர்த்திகள்**
(தேவார உதவிப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு)

பண்ணிசை ஆசிரியர்
தேவார இசைக்கலைமணி
**முனைவர் சிவகௌரி கிரீஷ்குமார் அம்மையார்**
(சிதம்பரம், தமிழ்நாடு)

**திருமுறை நெறிச்செல்வர் 'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்**
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பண்ணிசை
உயர்கல்விச்சான்றிதழ் கற்கைநெறி இணையவழி பயிற்சிநெறி
சமய விவகாரங்களுக்கான செயலாளர், கொழும்பு விவேகானந்தசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பண்ணுக்கு ஒரு பாடல்'

(ஒலித்தொகுப்புடன் கூடிய திருமுறைப் பாடல்களின் தொகுப்பு )

(c)'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

முதற்பதிப்பு: 2024

ISBN: 978-624-98795-1-5

பதிப்பாசிரியர் : செ. அம்பலவாணர்
478/28, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு - 15
தொ.பே : 0714280809
மின்னஞ்சல் : ambalam9591@gmail.com

அச்சுப்பதிப்பு : குமரன் அச்சகம்,
இல : 39, 36வது ஒழுங்கை
கொழும்பு - 06
தொ.பே : 112364550
மின்னஞ்சல் : books@kumarangroup.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை..

பண்ணிசை ஆசிரியர்
**திருமுறைக்கலாநிதி, முனைவர்**
**திருஞான. பாலச்சந்திர ஓதுவா மூர்த்திகள்**
(தேவார உதவிப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு)

திருச்சிற்றம்பலம்

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி

எல்லாம்வல்ல எம்பெருமானை அருள்வேண்டி வணங்கி, திருவருளையும் குருவருளையும் சிந்தித்து, சைவசமய வழிபாட்டு உலகிலேயே இறைவனை வணங்கி வழிபாடுசெய்து அவனுடைய திருவருளைப் பெற்றுய்வதற்கு பலவழிகள் இருக்கின்றன. இவ்வழிமுறைகளில் நமக்கெல்லாம் சுலபமான மிக எளிமையான மற்றும் நல்வாய்ப்புள்ள வழியாகஇருப்பது இசைவழிபாடு ஆகும்.

இசையினாலே பண்ணிசைப் பதிகங்களைப்பாடி இறைவனுடைய திருவருளைப் பெறுவதே இந்த வழிபாட்டுமுறையின் நோக்கமாகும். இவ் இசைவழிபாட்டு முறைமையிலே சிறப்பானதும், நமது தாய்மொழியான தமிழ்மொழியில் அமைந்த தமிழ்வேத மந்திரங்களாயும் அமைந்திருப்பவை திருமுறைகளே. அருளாளர்கள் தோன்றி அருள்பெற்றதன் பின்பு பாடிய பாடல்கள்தான் இங்கு திருமந்திரமாக, தமிழ்மந்திரமாகத் தெய்வீகத் திருமுறைகளாகப் நாம் போற்றிப்பாடி வருகின்றோம்.

இத்தகைய தெய்வீகத்திருமுறைகளை பண்ணிசையோடு ஒரு கட்டமைப்போடு ஓதி வழிபாடு செய்வது சிறப்பானதாகும். அந்த முறைமைகளில் தேவாரப் பாடசாலைகளில் முறையாகப் பயின்றவர்கள்தான் ஓதுவாமூர்த்திகள் என அழைக்கப்படுகின்றார்கள். இந்த ஓதுவா மூர்த்திகளிடம் பயிற்சிபெற்ற பல அடியார்பெருமக்கள் உலகம் முழுவதும் இந்தப் பண்ணிசைப் பதிகங்களைப்பாடி பரமனது அருளைப் பெற்று வருகின்றார்கள்.

இந்த வகையிலே இலங்கைத் திருநாட்டின் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மிக அற்புதமான ஒரு முன்னெடுப்பினை முன்னெடுத்திருக்கிறார்கள். அதாவது இலங்கையிலுள்ள அறநெறிப் பாடசாலைகளிலே பயிற்றுவிக்கக்கூடிய ஆசிரியர்களை ஒருமுகப்படுத்தி அவர்களை ஒருசீராக பண்ணிசை மரபோடு பாடச்செய்வது என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பிறகு அவர்கள் அதனை அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து இலங்கை முழுவதும் ஒருமுகப்படுத்தி ஒரு நேர்கோட்டிலே ஒருமையிலே அற்புதமான ஒரு சீரமைப்பிலே இந்த திருமுறைப் பதிகங்களைப் பண்ணிசைப் பதிகங்களாகப் பண்ணோடு பாடச்செய்வதே அதன் நோக்கமாகும்.

இந்த முறைமையிலேதான் நமது முன்னாள் பணிப்பாளர் உயர்திரு அ. உமாமகேஸ்வரன் ஐயா அவர்கள் எங்களை அணுகி இந்தப் பண்ணிசைப் பயிற்சிநெறி சம்பந்தமாக கலந்துரையாடியபோது அதனை மகிழ்வுடன் ஏற்று, இதற்கான ஒரு திட்ட வடிவமைப்புச் செய்து, பாடத்திட்டம் அமைத்து இணையத்தின் மூலமாக இந்த வகுப்பினை நடத்திக்கொண்டு இருக்கின்றோம். அந்தவகையில், இலங்கை முழுவதிலும் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் இதிலே பங்கேற்று மிகச் சிறப்பாகப் பண்ணிசையினை பயிற்சிபெற்று அதன்பிறகு பயிற்றுனர்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதன்விளைவாக சிவபூமியாம் இலங்கைத் திருநாட்டிலே பல்லாயிரம் குழந்தைச் செல்வங்களை பாடச்செய்தும் வருகின்றார்கள். இந்நிகழ்வு இன்று உலகம் முழுவதும் பரந்து சென்று கொண்டிருக்கின்றது. தொடர்நது பணிப்பாளராக பொறுப்புக்களை ஏற்ற திரு ய. அநிருத்தனன் ஐயா அவர்கள் இந்தப் பயிற்சிநெறியின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் உணர்ந்து, அவ்வப்போது தனது ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டியாக எமக்கு பக்கபலமாக இருந்துவருகிறார்.

அந்த முறைமையிலே இந்த பண்ணிசைப் பயிற்சியிலே கிடைத்த ஒரு அனுபவமாக பண்ணுக்கு ஒரு பாடல் என்ற நூல்தொகுப்பினை இப்பயிற்சி நெறியில் பண்ணிசை பயிலும் அம்பலவாணர் அவர்கள் தொகுத்து சிறப்பாக வழங்கியிருக்கின்றார்கள்.

இந்த நூலானது இதில் பயிற்சி பெற்றவர்களோடு, எதிர்காலத்தில் பயிற்சி பெறப் போகின்றவர்களுக்கும் மற்றைய ஏனைய சைவ அடியார்கள் அனைவருக்கும் ஒருதுணை நூலாகவும், அவர்களைப் பண்ணோடு இசைக்க, பொருள் உணர்ந்து பாட வரவழைக்கக்கூடிய நூலாகவும் அமைந்துள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்த அற்புதமான படைப்பு சைவசமய வழிபாட்டில் அடியார்கள் ஒவ்வொருவரிடமும் அனைவரிடமும் இருக்கவேண்டிய ஒரு தொகுப்புநூலாக அமைந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இந்த நூற்தொகுப்பினைச் செய்த அம்பலவாணர் அவர்களை நான் மனதாரப் பாராட்டி மகிழ்கின்றேன். அவரை வாழ்த்துகின்றேன். அவரது பணிகளை வணங்குகின்றேன். அவரது பணிகள் மேலும் சிறக்க எம்பெருமானை பண்ணிசைப் பதிகங்கள் மூலம் வாழ்த்தி வேண்டிக்கொள்ளுகின்றேன். அவரது தொண்டு வாழ்க.

இந்த தொகுப்பு நூலானது நமது திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் சேர்ந்திசை வழிபாட்டின் இரண்டாவது ஆண்டு நிகழ்விலே எம்பெருமானுடைய திருச்சந்நிதியிலே 'பாடல் வீணையர் பலபலசரிதையர்' என்று ஞானசம்பந்தரால் போற்றி வாழ்த்திப்பாடிய திருத்தலத்திலிருந்து வெளிவருவது சாலப்பொருத்தமாக அமைந்து இருக்கின்றது. அதற்காக நாம் திருவருளைவணங்கிக் கொள்கின்றோம். இந்த தெய்வீகத் திருப்பணியிலே எம்மோடு துணை ஆசிரியர்களாக இருந்தவர்கள் மற்றும் பணிப்பாளர்கள், இந்துசமய கலாசாரதிணைக்கள உத்தியோகத்தர், அடியார் பெருமக்கள் அனைவருக்கும் இந்த நல்ல பொழுதிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த நிகழ்வினைத் தொடக்கி வைத்த பெருமைக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராசா ஐயா அவர்களுக்கும் மற்றும் முதலாண்டு நிகழ்வுக்குவருகைதந்து சேர்ந்திசை வழிபாட்டை நிகழ்த்துவதற்கு ஆசியுரை வழங்கி ஆரம்பித்து வைத்த நமது தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கை அம்மன் ஆலயத்தின் நிருவாகத் தலைவர் ஆறுதிருமுருகன் ஐயா அவர்களுக்கும் ஏனைய அடியார் பெருமக்களுக்கும் எனது வணக்கங்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நிறைவாக திருமுறைகள் ஓதாய் என அருள்வழங்கிய தருமையாதீன குருமுதல்வர் குருஞானசம்பந்தர் அவர்களுடைய குருவருளை வேண்டி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

திருஞான. பாலச்சந்திர ஓதுவா மூர்த்திகள்
05.05.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுரை..

பண்ணிசை ஆசிரியர்
தேவார இசைக்கலைமணி
**முனைவர் சிவகௌரி கிரீஷ்குமார் அம்மையார்**
(சிதம்பரம், தமிழ்நாடு)

பண்ணிசை தமிழ்மண்ணிசை, உலக இசைவழக்கிலே மிகுந்த தொன்மையுடன் இந்திய இசைகளுக்கெல்லாம் தாயாக விளங்குவது தமிழிசை. இந்த தமிழிசையின் உயிர்நாடி பண். ஆகவேதான் அது பண்ணிசை எனவும் சிறப்பாக வழங்கப்படுகிறது. 'பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி' என்று அப்பர் பெருமான் இறைவனைப் போற்றிப் பாடுகிறார்.

சங்ககாலம் முதல் வழக்கிலிருந்த பண்ணிசையை நாயன்மார்கள் இறைவனைப் புகழ்ந்து பாடி தேவாரங்கள் மூலம் வளர்த்தார்கள். பண்ணோடு தேவாரங்களை ஓதும்போது இறைவனின் கழலை இலகுவாக அடையலாம் என்று உணர்த்தினார்கள். அவர்கள் காலத்திலிருந்தே தேவாரங்களைப் பண்ணோடு ஆலயங்களில் ஓதும் முறை தோன்றி இன்றுவரை ஆலய வழிபாடுகளில் ஒன்றாகவும், சைவமக்களின் வாழ்வில் இன்றியமையாததாகவும் விளங்குகிறது. தேவாரம் ஓதுபவர்கள் மன்னர்காலத்தில் பிடாரர்கள் என்றும், பின் ஓதுவார்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். மன்னர்கள் பல நிவந்தங்களை அளித்து இவர்களை ஆதரித்தனர். அந்தவகையில் இன்றுவரை ஆயிரம் வருட பாரம்பரியமாக திருமுறைகளைப் பண்ணோடு இசைத்து தமிழோடு, இசையும் வளர்த்து, சிவப்பணி, ஆற்றி வளர்த்து வருபவர்களே ஓதுவார்கள்.

இலங்கையிலும், மன்னர்காலத்திருந்து, நாவலர் பெருமான் போன்ற சைவப்பெரியார்கள் இப்பண்ணிசையை வளர்க்க அருந்தொண்டு செய்துள்ளார்கள். அந்தவகையில் இந்துகலாசார அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் உமாமகேஸ்வரன் ஐயாவின் எண்ணத்தில், திருவருளால் உதித்தது இந்த இணையவழி பண்ணிசை வகுப்புத் திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் மரபுவழி வந்த, தமிழகத்தின் தலைசிறந்த ஓதுவாரும், எனது குருவுமாகிய முனைவர் திருஞான பாலச்சந்திர ஓதுவார் அவர்களுடன் அடியேனையும் இந்த வகுப்பில் ஆசியராக நியமித்து பெரு வித்தொன்றை விதைத்தார். புதிய பணிப்பாளராகப் பொறுப்பேற்ற திரு ய. அநிருத்தனன் ஐயா அதற்கு நீரூற்றி வளர்க்க இணைப்பாளர் திரு ம.செந்தூரன் அதனைக் கண்ணும் கருத்துமாக காத்து வழிநடத்திவர அது இன்று திருவருளால் நாடுமுழுதும் பரந்து விரிந்து பெரு விருட்சமாக வளர்ந்து வருகிறது.

சிறியேனுக்கு இதில் ஆசிரியர் பணி. குருநாதருடன் இணைந்து எனது தாய்நாட்டு மக்களுக்கு சைவப்பணி செய்யக் கிடைத்த அரிய சந்தர்ப்பம். இது எனது பிறவிப் பெரும்பயன். இலங்கைத் திருநாட்டின் திருகோணமலையில் பிறந்த அடியேனுக்கு தாய்மண்ணுக்கு சைவநற்பணியாம் பண்ணிசைப் பணியினை மேற்கொள்ளுவதற்கு கிடைத்த பெறற்கு அரிய வாய்ப்பு.

இப்பயிற்சி நெறியானது இணையமூலம் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதேவேளை நேரடிக்கள நிகழ்வாக இலங்கையின் பாடல்பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சரஆலய கும்பாபிசேக தினத்தன்று பயிலுனர்கள் மற்றும் இசைஆசிரியர்கள் பங்குபற்றிய சேர்ந்திசை விண்ணப்பத்தினை ஆலயமுன்றலில் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் முன்னிலையில் சமர்ப்பித்தமையைக் குறிப்பிடலாம். மனநிறைவைத்தந்த நிகழ்வு. அத்துடன் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு உட்பட பல பிரதேசங்களுக்கும் சென்று பயிலுனர்கள் பயிற்றுவித்த அறநெறி சிறார்களின் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தமை பசுமையான நினைவுகளைத்தந்தது. இவ்வருடமும் 19.05.2024 அன்று திருக்கேதீச்சரத்திலும், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை தினமான 25.05.2024 அன்று தலமான எனது பிறந்தமண்ணான சேர்ந்திசை விண்ணப்பத்தை சமர்ப்பிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளின்போது நாட்டின் அடுத்தசந்ததியினரின் சைவத்தின் மீதுள்ள பற்றுதலைக் கண்கூடாகக் காணக்கிடைத்தது. அத்துடன் புதிய பல உறவுகளைச் சொந்தங்களைப் பெற்றுத் தந்தது என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான அரியசந்தர்ப்பத்தினைப் எனக்குப் பெற்றுத்தந்த, இப்பயிற்சிநெறிக்குத் தூண்களாக இருந்து வழிகாட்டி நிற்கும் முன்னைநாள் பணிப்பாளர் திரு உமாமகேஸ்வரன் ஐயா மற்றும் தற்போதைய பணிப்பாளர் திரு ய. அநிருத்தனன் ஆகிய பெருந்தகைகளுக்கும், தமது பங்களிப்பை பலவழிகளிலும் நல்கிவரும் சகல இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த வகுப்பு மூலம் நாடளாவிய ரீதியில் எத்தனையோ திருமுறை சொந்தங்களை வரமாகப் பெற்றேன். அவர்களில் பலர் அனுபவசாலிகளாக இருந்தபோதும், தாம்ஒரு பயிலுனர் என்றே அடக்கமாகப் பங்குபற்றி பயிற்சிநெறிக்கும் பண்ணிசை நிகழ்வுகளுக்கும் பலவழிகளிலும் தமது பங்களிப்பை வழங்கி வருபவர்கள். அந்தவகையில் திரு. செல்லம் அம்பலவாணர் ஐயா எனது தந்தை போன்றவர். ஆரம்பம் முதலே இந்த வகுப்பிற்கான பாடங்களை தட்டச்சுச்செய்து நூல்வடிவாக தந்து, பலவழிகளில் எமக்கு இந்தவகுப்பு சிறப்பாக நடைபெற உறுதுணையாக விளங்கிவருபவர்.

இன்று 'பண்ணுக்கொரு பாடல்' என்ற நூலை கற்றவையில் தேர்ந்தெடுத்து தொகுத்து, குறுகியகாலத்தில் தயாரித்து, பாடநெறியின் அறுவடையாகவும் வருங்காலத் தலைமுறைக்காகவும் பெரும் 'கருவூலத்தை' உருவாக்கியுள்ளார். அவர்களைப் பாராட்டி, வாழ்த்தி வணங்கி மகிழ்கிறேன். அவர்கள் இன்னும் இதுபோல் பல சிவப்பணிகள் செய்து நீண்டகாலம் வளமோடும், நலமோடும் வாழ எல்லாம் வல்ல கோணேசப் பெருமானை வேண்டுகிறேன்.

சிவகௌரி கிரீஷ்குமார்
05.05.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப்பாளர், இலங்கை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

## திரு யதுகுலசிங் அநிருத்தனன்

அவர்களின்

# வாழ்த்துரை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பண்ணிசை உயர்கல்விச் சான்றிதழ் கற்கைநெறி இணையவழி பயிற்சிநெறியின் சான்றிதழ் வழங்கும் இன்றைய தினத்திலே (19.05.2024) முதலாவது அணியில் பயிலுனராக இணைந்து இருநிலைப் பயிற்சிகளையும் நிறைவுசெய்த மறவன்புலோ செல்லம் அம்பலவாணர், இப்பயிற்சி நெறியில் பெற்றவற்றை அன்றாட ஆலய வழிபாடுகளுக்கு ஏற்றவாறு தொகுத்து **பண்ணுக்கு ஒரு பாடல்** என்று புத்தக வடிவில் வெளியிட்டு வைப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. ஒரு பயிலுனராக நூலாசிரியரின் பொறுப்புணர்வை மெச்சுகின்ற அதேவேளை, இது பயிற்சி நெறிக்குக் கிடைத்த வெற்றி என்றே நான் கருதுகின்றேன்.

நமதுநாட்டில் பண்ணோடு தேவார திருப்பதிகங்கள் பாடுவதில் காணப்படுகின்ற குறைபாட்டை நீக்குவதற்கு சிறந்ததளம் அறநெறிப் பாடசாலைகளே என்ற அடிப்படையில், அறநெறி ஆசிரியர்களை இந்தியாவின் சிறப்புமிகு அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர்களைக் கொண்டே பயிற்றுவிப்பது, சிறந்த பலனைத்தரும் என்ற எண்ணக்கருவுடன் எமது இலங்கை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் திரு அ. உமாமகேஸ்வரன் அவர்களால் தொடங்கப்பட்டதே இப் பயிற்சிநெறியாகும்.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொரோனாத் தாக்கமானது நாட்டை முடக்க நிலைக்குத் தள்ளியபோது ஏற்பட்ட கல்விமுறைமாற்றம் இத் திட்டத்திற்குக் கைகொடுத்தது. இணையவழி நிகழ்நிலை மூலம் கற்கை முறைகளைத் தொடருவது என முடிவெடுக்கப்பட்டபோது பல அறநெறி ஆசிரியர்களல்லாதோரும் ஆர்வத்துடன் இணைந்தனர். ஆரம்பத்தில் ஏறத்தாழ முந்நூறு வரையிலானோர் இணைந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான பாடத்திட்டமானது விரிவுரையாளர்கள் மற்றும் எமது திணைக்கள அலுவலர்களினால் வடிவமைக்கப் பட்டிருந்தது. நேரடிப் பயிற்சி இசை அளிக்கைகளும் மேற்கொள்வது என முடிவெடுக்கப்பட்டு பாடல்பெற்ற தலங்களான திருக்கேதீச்சரம் மற்றும் திருக்கோணேஸ்வரம் உட்பட பிராந்திய நிலையங்களிலும் விரிவுரையார்களின் நேரடி பங்குபற்றுதலுடன் சேர்ந்திசை விண்ணப்பங்களாக ஒழுங்கமைக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு நிலையின் இறுதியிலும் செயன்முறைப் பரீட்சை இணையமூலமே நடாத்தப்பட்டு இன்று அதில் தேறியவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

இத்தருணத்தில், எவ்வளவோ சிரமத்தின் மத்தியிலும் இசை ஆசிரியர்களாகக் கலந்து சிறப்பான முறையில் பயிற்றுவித்த திருமுறைக்கலாநிதி முனைவர் திருஞான பாலச்சந்திர ஓதுவா மூர்த்திகள், தேவாரஇசைக்கலைமணி முனைவர் சிவகௌரி கிரீஷ்குமார் அம்மையார் மற்றும் இப்பயிற்சி நெறி சிறப்பாக முன்கொண்டு செல்வதற்கு பலவழிகளிலும் எம்மோடு உடனிருந்து செயல்படுத்திய திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட அனைவருக்கும் இத்தருணத்தில் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் கற்றவற்றின் தொகுப்பை தனது பார்வையில் தொகுத்து வெளியிடும் பயிலுனரான ஓய்வுநிலைத் தொலைத்தொடர்புப் பொறியியலாளர், கலைஞர், ஓதுவார் திரு செல்லம் அம்பலவாணர் அவர்களைப் பாராட்டுவதோடு, இதனை மற்றையவர்களும் பயன்படுத்தி பண்ணோடு திருமுறைஓதும் சமூகத்தை உருவாக்கும் எமது பணியில் இயன்ற பங்களிப்பை வழங்குவீர்கள் என எண்ணுகின்றேன்

ய. அநிருத்தனன்
பணிப்பாளர், இந்து கலாசாரத் திணைக்களம்
29.04.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு
முன்னைநாள் பணிப்பாளர்,
இலங்கை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
**திரு அ. உமாமகேஸ்வரன்**
அவர்களின்

## வாழ்த்துரை

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களமானது, இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகம் ஊடாக, ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பலவற்றை முன்னெடுத்தவண்ணம் உள்ளது. இதன் ஓர் அம்சமாக, இந்துசமய கலாசாரக் கற்கைகள் நிறுவகத்தின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பயிற்சி நிலையம் ஊடாக ஆன்மிக முன்னேற்றத்திற்குத் துணை செய்யும் தெய்வீகக்கலை தொடர்பான அறிவைப் பெற்றுக்கொண்டு, ஆன்மிக முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே பண்ணிசை உயர்சான்றிதழ் கற்கைநெறியாகும்.

நிகழ்நிலைத் தொடக்க வைபவமாக *11.02.2022* அன்று, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் முன்னாள் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர், சிவஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, தெல்லிப்பளை, ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர், செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களின் தலைமையில், யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜா அவர்கள் பிரதம அதிதியாகச் சிறப்பிக்க, வளவாளர்களான தமிழ்நாடு, அண்ணாமலைப் பல்கலைக்கழக, தேவார உதவிப் பேராசிரியர், திருமுறைக் கலாநிதி, முனைவர், குமாரவயலூர் திருஞானபாலச்சந்திர ஓதுவாமூர்த்திகள் மற்றும் சிதம்பரம், தேவார இசைக்கலைமணி, முனைவர் சிவகௌரி கிரிஷ்குமார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொள்ள ஆரம்பமான இப்பயிற்சி நெறி, இத்துணைதூரம் இன்று சிறப்புற்றிருப்பது இறை செயலன்றி வேறில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் என்பது இசையின் அடிப்படை வடிவங்களில் ஒன்று. சுமார் 2500 ஆண்டுகளுக்கும் மேலான வரலாறு கொண்டது பண்ணிசை. தேவாரப் பாடல்கள் பண்முறைகளிலே சுமார் 1000 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாடப்பட்டு வருகின்றன. தேவார முதலிகள் மூவரும் பண்ணமைத்துப் பாடிய பாடல்கள் 9295 இற்கும் மேற்பட்டவை ஆகும். உலகில் வேறு எந்த மொழியிலும் இசை இப்படி வளமாக வளர்ந்த நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை.

பண்ணிசை — நம் சமூகத்தில் ஆழ வேரூன்ற வேண்டும், ஆன்மிக முன்னேற்றத்திற்குத் துணை செய்யவேண்டும், தெய்வீகக் கலை தொடர்பான அறிவைப் பெற்றுக்கொண்டு, தனிமனிதர்களது ஆன்மிக முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக வேண்டும் என்ற எண்ணத்தில் உதித்த இப்பயிற்சி நெறியின் வெற்றிப் பாதையின் ஒரு மைல்கல்லாக "பண்ணுக்கு ஒரு பாடல்" தொகுப்பு அமைகிறது.

கொழும்பு, விவேகானந்தசபையின் சமயவிவகாரங்களுக்கான செயலாளர், திருமுறை நெறிச்செல்வர், 'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர் அவர்கள், பல்துறை ஆளுமை மிக்கவர். கவிதை, வானொலி நாடகம், சிறுவர் இலக்கியத்துறை போன்றவற்றில் இவர்தம் படைப்பாற்றலுக்காகப் பெற்றுக்கொண்ட சாகித்திய விருதுகளும் தேசிய கௌரவங்களும் இதற்குத் தக்கசான்று. இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசாரக் கற்கைகள் நிறுவகம் ஊடாக, நடத்துகின்ற பண்ணிசை உயர்சான்றிதழ் கற்கைநெறி முதலாம் அணியின் மாணவனாக இவர் கற்றுக்கொண்ட பண்ணிசை நுட்பமே, இவரைப் பண்ணுக்கு ஒரு பாடல் படைக்க வைத்துள்ளது எனக் கூறின் மிகையில்லை. இவரது படைப்பாக்கம் சிறந்த முறையில் வெளிவந்து பயன் நல்க, இறையாசி வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

அ.உ.மாமகேஸ்வரன்
மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு
03.05.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பண்ணிசை உயர்கல்விச்சான்றிதழ் கற்கைநெறி இணையவழி பயிற்சிநெறி இணைப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்

## திரு மயில்வாகனம் செந்தூரன் அவர்களின் மகிழ்வுரை

இந்துசமய கலாச்சாரஅலுவலர்கள் திணைக்கள முன்னைநாள் பணிப்பாளரின் உள்ளத்துதித்து 11.02.2022 அன்று கால்கோளிட்ட இரண்டுவருட கால இணையவழிமூல பண்ணிசை உயர்கல்விச் சான்றிதழ் கற்கைநெறி சென்னை, தமிழ்நாடு இசைப்பேராசிரியர்களான திருமுறைக் கலாநிதி இசைப்பேராசிரியர் குமாரவயலூர் திருஞான பாலச்சந்திர ஓதுவா மூர்த்திகள் மற்றும் தேவார இசைக்கலைமணி முனைவர் சிவகௌரி கிரீஷ்குமார் அம்மையார் (இவர் திருகோணமலையை பூர்வீகமாகக் கொண்டவர்) ஆகியோரினது பங்களிப்புடன் தொடங்கப்பட்டது. இப்பயிற்சி நெறிக்கான பாடத்திட்டம் விரிவுரையாளர்களுடன் எமது திணைக்கள அலுவலர்களும் இணைந்து தயாரிக்கப் பட்டது.

விரிவுரையாளர்களும் பயிலுனர்களும் இணைந்த அளிக்கை நிகழ்வுகளாக திருக்கேதீச்சர கும்பாபிசேக தினத்திலும், திருக்கோணேச்சர திருஞானசம்பந்தர் குருபூசையின்போதும், பிரதேசரீதியாகவும் சேர்ந்திசை அளிக்கைகளும் இப்பயிற்சி நெறியில் பயிலும் ஆசிரியர்கள் கற்பிக்கும் மாணவர்களின் அரங்க, அளிக்கை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இன்று முதலாவது அணியின் முதலாவது மற்றும் இரண்டாவது வருட சான்றிதழ்களும் இரண்டாவது அணியின் முதலாவது வருட சான்றிதழ்களும் வழங்கப்படுகின்ற இச் சந்தர்ப்பத்தில் முதலாவது அணியின் பயிலுனரான திரு செ. அம்பலவாணர், தான் கற்றலில் பெற்றவற்றை பிறிதொரு கோணத்தில் தனியாளாகத் தொகுத்து, ‘பண்ணுக்கு ஒரு பாடல்’ என்று புத்தகவடிவில் வெளியிடுவதானது இதற்கு மகுடம் சூட்டுவதாக அமைந்துள்ளதென்றே கூறவேண்டும். இத்தொகுப்பானது கற்றல் என்ற நோக்கிலிருந்து விரிந்து பரந்து சென்று, களத்தில் செயற்படுத்தல் என்ற நிலைக்கு நகர்த்தியிருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பம்சமாகும். அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மட்டுமல்ல் ஒரு சைவசமயிக்கு தேவையானவற்றை, பண்ணுக்கு ஒரு பாடலாகத் தந்துள்ளார். பண்ணொன்றில் ஒருபாடலை அடியொற்றி அதே பண்ணிலமைந்த மற்றைய பாடல்களைப் பாடுவது கடினமானதாக இருக்கும் என நான் எண்ணவில்லை. அத்துடன் அந்தந்தப்பாடல்களை கற்பித்த ஆசான்களினது மூலக் குரலிலேயே பதிவேற்றம் செய்திருப்பது, எவரும் பிழையின்றி பயிலுவதை உறுதி செய்கின்றது. சிறப்பான ஒரு முன்னெடுப்பு.

ஏறத்தாழ இருபது வருடகாலமாக பெரும்பாலான கொழும்பு ஆலயங்களில் சைவசமயப் பணிகளில் ஈடுபட்டுவருவதில் கிடைத்த அனுபவத்தையும், கொழும்பு விவேகானந்த சபையின் சமயவிவகாரச் செயலாளராகவும் நாற்பது வருட பொறியியலாளர் என்ற அனுவத்தையும் திரட்டி இதை தொகுத்திருக்கின்றாரென்றே எண்ணத் தோன்றுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் இப்பயிற்சிநெறியானது வெற்றிகரமாக முன்கொண்டு செல்வதற்கு பக்கபலமாக இருந்த அனைவருக்கும் நன்றிகூறி, பயிற்றுவித்த திருமுறைக்கலாநிதி திருஞான பாலச்சந்திர ஓதுவாமூர்த்தி ஐயா தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டது போன்று இத்தொகுப்பானது சைவசமயிகளுக்கு தோத்திரப்பாடல்களை பண்ணோடு அன்றாட ஆலயத் தேவைகளுக்கு பயன்படுத்தும் ஒருகையேடாக அமையும் என எண்ணி எம்பெருமானின் கிருபையால் அனைவரும் இன்புற்றிருக்க வாழ்த்துகின்றேன்.

'என்கடன் பணி செய்து கிடப்பதே'

ம.செந்தூரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
04.05.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுவடை .. ..

ஒவ்வொரு நாணயத்துக்கும், செயலுக்கும், வித்தியாசமான இரு பக்கங்கள் இருப்பது போல உலகை ஆட்டிப்படைத்த கொரோணா என்ற கொள்ளைநோய்க்கும் இருபக்கம் இருந்தது அனைவரும் அறிந்ததே.. இந்த நோயானது துயரங்களை ஏற்படுத்திய அதே அசுரவேகத்தில் நிகழ்நிலைக் கல்விமுறையும் உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவியது சாதகத்தன்மை எனலாம். வீட்டில் இருந்தபடியே நாம் எண்ணியே பார்க்கமுடியாத வளவாளர்களுடன் பயணிக்கும் அரிய வாய்ப்பை எமக்கு ஏற்படுத்தித் தந்தமையை மறுக்கமுடியாது.. இந்தச் சந்தர்ப்பத்தைப் சரியான நேரத்தில் சரியான முறையில் பயன்படுத்தி எதிர்காலச் சந்ததிக்கு சைவசமயக் கல்வியை ஊடுகடத்தும் அறநெறி ஆசிரியர்களை 'கற்பிப்பவர்களைப் பயிற்றுவித்தல்' என்ற தாரகமந்திரத்தினைக் கொண்டு, இணையவழி மூலம் திருமுறைகளை பண்ணோடு ஓதுவதற்கு ஆசிரியர்களைப் பயிற்றுவித்து அதனூடாக மாணவர்களை நேரடியாக பயிற்றுவித்தல் என்ற அன்றைய பணிப்பாளர் திரு அ. உமாமகேஸ்வரன் ஐயாவின் எண்ணக்கருவே இந்த இணையவழி பண்ணிசை உயர்கல்விச்சான்றிதழ் கற்கைநெறியாகும். 11.02.2022 அன்று ஆரம்பித்த முதலாவது அணியினர் இருவருடப் பயிற்சியினை 19.05.2024 இன்று நிறைவு செய்கின்றனர்.

இப்பயிற்சிநெறிக்கு இசைஆசிரியப் பெருந்தகைகளான 'ஓதுவா மூர்த்திகளில் முதல்முனைவர்' என்ற சிறப்பையும் புதிய இந்தியப் பாராளுமன்றத் திறப்புவிழாவில் நந்திசெங்கோல் நிறுவியநிகழ்வில் திருமுறைகளைஓதிய பெருமையையும் கொண்ட தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழக தேவார உதவிப்பேராசிரியர் முனைவர் திருஞான பாலச்சந்திர ஓதுவாமூர்த்திகள் மற்றும் எமது மண்ணின் திருகோணமலையைப் பிறந்தகமாகக்கொண்ட சிதம்பரம் தமிழ்நாடு தேவாரஇசைக்கலைமணி முனைவர் சிவகௌரி கிரீஷ்குமார் அம்மையார் ஆகியோரின் பங்களிப்பையும் பெற்று திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு ம. செந்தூரன் அவர்களை பயிற்சிநெறி இணைப்பாளராக நியமித்துச் சாதித்திருக்கின்றார்கள். முற்றிலும் இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்ட இந்த இணையவழிக் கற்கைநெறியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘அறநெறி ஆசிரியர்கள்’ என்ற கட்டுப்பாட்டினை ‘எவரும்’ என்று தளர்த்தியதால் என்னைப்போன்ற இசைத்திறன் சிறிதளவும் இல்லாத ஆனால் தேவாரம் ஓதுதலில் ஆர்வமுடைய எத்தனையோ ‘ஏழை’ அடியவர்களுக்கும் இவ் அரியவாய்ப்பில் இணைய வாய்ப்புக்கிடைத்தது.

பண்தொடர்பான தெளிவையும் முறையான பயிற்சியையும் தந்து எம்மைப் பண்படுத்தியது மட்டுமல்ல, பாடல்பெற்ற தலமான திருக்கேதீச்சர கும்பாபிசேக நிகழ்விலும் கலந்து குழுவாக இசையாசிரியர்களின் வழிகாட்டலில், அவர்களுடன் இணைந்து திருமுறை சமர்ப்பணம் செய்யும் பெரும் பாக்கியமும் கிடைத்தது.

இப்பயிற்சிநெறியில் கற்றவற்றில் எளிமையான பாடல்களின் ஒருமாதிரியை (sample) எடுத்து பண்ணுக்கு ஒரு பாடலாகவும் ஆலயங்களில் முக்கிய நிகழ்வுகளில் ஓதும் பாடல்களாகவும் தொகுத்து, மூலப்பண்அமைப்பில் சிறிதும் மாறாது இசைஆசிரியப் பெருந் தகைகளின் குரலிசையிலேயே பாடல்களின் ஒலிவடிவங்களையும் தொகுத்து எதிர்காலத்தில் எம்மவருக்கு பயன்படட்டும் என்ற நோக்குடன் சமர்ப்பிக்கின்றேன். காலத்தின் தேவையுணர்ந்து இப்பயிற்சி நெறியைத் திட்டமிட்டு, வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய முன்னைநாள் பணிப்பாளர் திரு. அ. உமாமகேஸ்வரன் ஐயா, இன்னாள் பணிப்பாளர் திரு ய. அநிருத்தனன் ஐயா மற்றும் இணைப்பாளராக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு ம.செந்தூரன், அலுவலக உத்தியோகத்தர் திரு. கிருஷ்ணபிள்ளை ஸ்ரீசங்கரன் ஆகியோருக்கும், தமது பொன்னானநேரத்தை எமக்காக அர்ப்பணித்த பெருமதிப்புக்குரிய இசைஆசிரியப் பெருந்தகைகளான முனைவர் திருஞான பாலச்சந்திர ஓதுவாமூர்த்திகள் மற்றும் தேவார இசைக்கலைமணி சிவகௌரி கிரீஷ்குமார் அம்மையார் ஆகியோருக்கும் சிரம்தாழ்த்தி கரம்கூப்பி நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு, இப்பயிற்சிநெறியின் அறுவடையான ‘பண்ணுக்கொரு பாடல்’ என்ற தேர்வு செய்யப்பட்ட பாடல் தொகுப்பையும் ஒலிப்பதிவினையும் சமர்ப்பிக்கின்றேன்..

‘மறவன்புலோ’ செல்லம் அம்பலவாணர்
கொழும்பு,
2024.05.19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்


1. திருமுறைகள் ஓர் அறிமுகம் — 23
2. மூவர் தேவாரப் பதிகங்களில் பண்ணுக்கொருபாடல் — 31
3. விசேட பதிகங்கள் — 47
4. உற்சவகாலத்தின்போது விசேடமாகப் பாடப்படுவன — 61
   i. கொடியேற்றம்
      - திருமுறைகள்
      - கொடிக்கவி
      - நவசந்திப்பாடல்கள்
   ii. தீர்த்தோற்சவம்
   iii. திருவூஞ்சல்
5. நால்வர் சிறப்புப் பதிகங்கள் — 72
   i. முதற்பதிகம் (ஆட்கொள்ளப்பட்ட பதிகம்)
   ii. நிறைவுப்பதிகம் (முத்தியடைந்த பதிகம்)
   iii. முழுப்பதிகமும் பாடிய பலனைப்பெற ஓதவேண்டிய பதிகம்
6. பாடல்பெற்ற இலங்கைத்திருத்தல திருப்பதிகங்கள் — 101
   i. திருக்கோணேச்சரம்
   ii. திருக்கேதீச்சரம்
7. வாழ்த்து — 111




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | திருமுறைகள் ஓர் அறிமுகம் | | 23 |
| 2 | மூவர் தேவாரப்பதிகங்களில் பண்ணுக்கொரு பாடல் | | |
| | பண் (அகர நிரையில்) | பாடல் | பக் |
| 1 | அந்தாளிக் குறிஞ்சி | சுண்ண வெண்ணீறணி.. | 33 |
| 2 | இந்தளம் | சடையாய் எனுமால்.. | 33 |
| 3 | காந்தாரம் | மாதர்ப் பிறைக்கண்ணி.. | 34 |
| 4 | காந்தார பஞ்சமம் | சொற்றுணை வேதியன்.. | 34 |
| 5 | குறிஞ்சி | முத்து விதான .. | 35 |
| 6 | கொல்லி | மண்ணில் நல்லவண்ணம்.. | 35 |
| 7 | கொல்லிக் கௌவானம் | பத்தூர் புக்கிரந்துண்டு.. | 36 |
| 8 | கௌசிகம் | வீடலால வாயிலாய் .. .. | 36 |
| 9 | சாதாரி | மருந்தவை மந்திரம் .. | 37 |
| 10 | சீகாமரம் | கண்காட்டு நுதலானும்.. | 37 |
| 11 | செந்துருத்தி | மீளா அடிமை.. | 38 |
| 12 | செவ்வழி | தொண்டரஞ்சு களிறு.. | 38 |
| 13 | தக்கராகம் | கரவின்றி.. | 39 |
| 14 | தக்கேசி | ஆலந்தான் உகந்து.. | 39 |
| 15 | நட்டபாடை | அங்கமும் வேதமும்.. | 40 |
| 16 | நட்டராகம் | பொன்னார் மேனியனே.. | 40 |
| 17 | பஞ்சமம் | கண்பொலி நெற்றியினான்.. | 41 |
| 18 | பழந்தக்கராகம் | சொன்மாலை பயில்கின்ற.. | 41 |
| 19 | பழம்பஞ்சுரம் | மற்றுப்பற்றெனக்கு.. | 42 |
| 20 | பியந்தைக் காந்தாரம் | வேயுறுதோளி பங்கன் .. | 42 |
| 21 | புறநீர்மை | தாயினும் நல்ல.. | 43 |
| 22 | மேகராகக் குறிஞ்சி | நீறு சேர்வதொர்.. | 43 |
| 23 | யாழ்முரி | மாதர் மடப்பிடியும்.. | 44 |
| 24 | வியாழக் குறிஞ்சி | அவ்வினைக்கு இவ்வினை. | 44 |
| | | | |
| i | 25.திருநேரிசை | கங்கையைச் சடையில்.. | 45 |
| ii | 26.திருவிருத்தம் | ஈன்றாளுமாய் எனக்கு.. | 45 |
| iii | 27.திருக்குறுந்தொகை | அன்னம் பாலிக்கும் .. | 46 |
| iv | 28.திருத்தாண்டகம் | எல்லாஉலகமும் ஆனாய்.. | 46 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 3. விசேட பதிகங்கள் | | | |
|---|---|---|---|
| 29 | விநாயகர் துதி | பிடியதனுருவுமை.. | 48 |
| 30 | முருகன் துதி | நங்கடம்பனை.. | 48 |
| 31 | நால்வர்துதி | பூழியர்கோன்.. | 48 |
| 32 | திருவாசகம் (திருமுறை 8) | பால்நினைந்தூட்டும்.. | 49 |
| 33 | | பண்சுமந்த பாடல்.. | 49 |
| 34 | திருக்கோவையார்~திருமுறை8 | ஆனந்த வெள்ளத்து.. | 50 |
| 35 | திருவிசைப்பா (திருமுறை9) | ஒளிவளர் விளக்கே.. | 50 |
| 36 | | அன்னமாய் விசும்பும்.. | 51 |
| 37 | திருப்பல்லாண்டு~திருமுறை9 | மன்னுகதில்லை.. | 51 |
| 38 | | ஆரார் வந்தார்.. | 52 |
| 39 | திருமந்திரம் ~திருமுறை 10 | யான் பெற்ற இன்பம்.. | 52 |
| 40 | காரைக்காலம்மையார்~திருமுறை 11 | கொங்கை திரங்கி.. | 53 |
| 41 | பெரியபுராணம்~திருமுறை12 | அந்நகரில் அமர்ந்து.. | 53 |
| 42 | | இறவாத இன்ப.. | 54 |
| 43 | திருப்புகழ் | மாதர் வசமாயுற்று.. | 54 |
| 44 | | விலைக்கு மேனியில் | 55 |
| 45 | கந்தரனுபூதி | ஆடும் பரிவேல்.. | 56 |
| 46 | கந்தரலங்காரம் | அழித்துப்பிறக்க ஒட்டா.. | 56 |
| 47 | அபிராமி அந்தாதி | தனம் தரும்.. | 57 |
| 48 | அபிராமிப் பதிகம் | கலையாத கல்வியும்.. | 57 |
| 49 | சகலகலாவல்லி மாலை | வெண்டாமரைக்கன்றி.. | 58 |
| 50 | திருவெம்பாவை | ஆதியும்அந்தமும் இல்லா.. | 58 |
| 51 | திருப்பள்ளியெழுச்சி | போற்றியென் வாழ்முதலா.. | 59 |
| 52 | திருஇலிங்கக் குறுந்தொகை | புக்கணைந்து புரிந்தலர்.. | 59 |
| 53 | திருக்கதவு திறக்க | பண்ணினேர் மொழியாள். | 60 |
| 54 | திருக்கதவு அடைக்க | சதுரம் மறைதான்.. | 60 |

| 4. உற்சவகாலத்தின் போது விசேசமாகப்பாடப்படுபவை | | | | | |
|---|---|---|---|---|---|
| 55 | திருமுறை | மூலாதாரகணபதி | தக்கராகம் | வைத்தனன்.. | 62 |
| 56 | | மூஷிக தேவர் | காந்தாரபஞ்சமம் | இடரினும்.. | 63 |
| 57 | | இடபதேவர் | காந்தாரபஞ்சமம் | இல்லகவிளக்கது. | 63 |
| 58 | | சிம்மதேவர் | நட்டபாடை | தோடுடைய.. | 64 |
| 59 | | மயூரதேவர் | இந்தளம் | நெய்யும்பாலும் | 64 |
| 60 | கொடிக்கவி | | | ஒளிக்கும் இருளுக்கும்.. | 65 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 61 | நவ சந்திப்பாடல்கள் | பிரம ~மத்தி | மேகராகக்குறிஞ்சி | நீறுசேர்வதோர் | 66 |
| 62 | | இந்திர~கிழக்கு | காந்தாரம் | மந்திரமாவது | 66 |
| 63 | | அக்கினி~தென்கிழக் | கொல்லி | தம்மையே.. | 67 |
| 64 | | இயம~தெற்கு | கௌசிகம் | வீடலால.. | 67 |
| 65 | | நிருதி~தென்மேற்கு | நட்டபாடை | அங்கமும்வேத | 68 |
| 66 | | வருண~மேற்கு | சீகாமரம் | கண்காட்டு.. | 68 |
| 67 | | வாயு~ வடமேற்கு | தக்கேசி | பூவார்மலர்.. | 69 |
| 68 | | குபேர~வடக்கு | தக்கராகம் | வைத்தனன்.. | 69 |
| 69 | | ஈசான~வடகிழக்கு | சாதாரி | கோழைமிட.. | 70 |
| 70 | தீர்த்தோற்சவம் | | திருப்பொற்சுண்ணம் | முத்துநல்தாமம்.. | 71 |
| 71 | திருவூஞ்சல் | | திருப்பொன்னூசல் | சீரார்பவளங். | 71 |

**5. நால்வர் சிறப்புப் பதிகங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 72 | முதற்பதிகம் (ஆட்கொண்ட போது பாடப்பட்டது) | சம்பந்தர் | தோடுடைய செவியன். | 73 |
| 73 | | நாவுக்கரசர் | கூற்றாயினவாறு.. | 75 |
| 74 | | சுந்தரர் | பித்தாபிறைசூடி.. | 78 |
| 75 | | மணிவாசகர் | நமச்சிவாயவாழ்க.. | 80 |
| 76 | நிறைவுப்பதிகம் (முத்தியடைந்த பதிகம்) | சம்பந்தர் | காதலாகி கசிந்து.. | 83 |
| 77 | | நாவுக்கரசர் | எண்ணுகேன் என்.. | 86 |
| 78 | | சுந்தரர் | தானெனைமுன்.. | 89 |
| 79 | | மணிவாசகர் | முத்திநெறி அறியாத.. | 91 |
| 80 | முழுப்பதிகமும் படித்தபலன் பெறுவதற்கு ஓதக்கூடியது | சம்பந்தர் | திருஎழுக்கூற்றிருக்கை.. | 93 |
| 81 | | நாவுக்கரசர் | திருஅங்கமாலை.. | 95 |
| 82 | | சுந்தரர் | திருத்தொண்டத்தொகை | 97 |
| 83 | | மணிவாசகர் | சிவபுராணம்.. | 97 |

**6. பாடல்பெற்ற இலங்கைத் தலங்களின் திருப்பதிகங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 84 | பாடல் பெற்ற இலங்கைத் தல பதிகங்கள் | திருக்கோணேச்சரம் | நிரை கழலரவம்.. | 102 |
| 85 | | திருக்கேதீச்சரம் | விருது குன்றமா.. | 104 |
| 86 | | திருக்கேதீச்சரம் | நத்தார்படை.. | 106 |

**7. வாழ்த்து**

| | | | |
|---|---|---|---|
| 87 | வாழ்த்து | வாழ்க அந்தணர்.. | 108 |
| 88 | வாழ்த்து | வான்முகில் வழாது.. | 108 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. திருமுறைகள் ஓர் அறிமுகம்

திருமுறைகள் எம்பெருமான் திருவாக்குகளே, தமிழ்மாலைகளே. எம்பெருமானுக்குப் பிடித்தவை. பூமாலை வாடலாம். பாமாலைகள் என்றும் நிலைத்துநிற்கும். பாடப்பாட பக்தி ரசத்தைத் தருவன. 'அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் நம்மைச் சொற்றமிழ் பாடு' என்று எம்பெமானால் சுந்தரருக்குப் பணித்து பாடப்பெற்றவை.

**திருமுறைகளின் வகைப்படுத்தல் (சாராம்சம்)**

| திருமுறை | ஆக்கியோர் | விடயம் | | பாடல் |
|---|---|---|---|---|
| 1, 2, 3 | சம்பந்தர் | திருக்கடைக்காப்பு | **தோத்திரங்கள்** (இறைவனை வாழ்த்திக் கூறுவன) | 4156 |
| 4, 5, 6 | நாவுக்கரசர் | தேவாரம் | | 3066 |
| 7 | சுந்தரர் | திருப்பாட்டு | | 1026 |
| 8 | மாணிக்க வாசகர் | திருவாசகம் | | 658 |
| | | திருக்கோவையார் | | 400 |
| 9 | 9* ஆசிரியர்கள் | திருவிசைப்பா | | 301 |
| | சேந்தனார் | திருப்பல்லாண்டு | | 11 |
| 10 | திருமூலர் | திருமந்திரம் | **சாத்திரம்** வாழ்வுக்கு வழிகாட்டி | 3047 |
| 11 | 12** ஆசிரியர்கள் | பிரபந்தம் | **பிரபந்தங்கள்** | 1401 |
| 12 | சேக்கிழார் | பெரியபுராணம் | **வரலாறுகள்** (63 நாயன்மார்) | 4286 |
| 12 திருமுறை | 27 ஆசிரியர்கள் | | | 18752 |
| 1—7வரை திருமுறைபாடிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் தேவாரமுதலிகள் எனவும் இவர்களுடன் மணிவாசகரும் சேர்த்து சமயகுரவர் எனவும் படுவர் | | | | |
| *= 9ஆம் திருமுறை திருவிசைப்பா ஆக்கியோர்: திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், சேதிராயர், புருஷோத்தமநம்பி | | | | |
| **= 11ஆம் திருமுறை ஆக்கியோர்:திருவாலவாயுடையார்(ஈசன்), காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமான், நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர், இளம்பெருமான்அடிகள், அதிரா அடிகள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி | | | | |

- திருமுறைகள் 12, பாடியோர் 27, செல்லரித்தவைபோக எஞ்சிய மொத்தப்பாடல்கள் —18752 (உட்செருகலால் தொகையில் சிறு மாற்றம்உண்டு) 103000 வரை இருந்ததாக திருமுறைகண்ட புராணம் கூறுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் 12 திருமுறைகளைப் பாடியோர் 27அருளாளர்களாகினும் அவர்களைப் பாடுவித்தவர் ஒருவரே. அவரே சிவபெருமான். அவர் பாடுவித்த வித்தகனார். பாடுவித்த நாயகன் என்கிறார்கள். நாம் திருந்தி உய்யும் பொருட்டு இறைவன் அருளாளர்களை இப்பூமிக்கு அனுப்பி அருளாளர்கள் வாயிலாக தான் சொல்ல வந்ததை சொல்லுவித்து திருமுறைகளாகத் தந்திருக்கின்றார்.

- "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" – மணிவாசகர்
- "சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்.. முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான் –மணிவாசகர்
- "என் நெஞ்சத்திருந்து அம்பலத்து நின்று புனைவித்த ஈசன்" (திருக்கோவை) –மணிவாசகர்
- "எனதுரை தனதுரையாக நீறுஅணிந்து ." – சம்பந்தரும்
- "வேயுறுதோளிபங்கன் விடமுண்ட .. உளமேபுகுந்த அதனால்" –சம்பந்தர்
- "என்னை நன்றாக இறைவன் படைத்தான் தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே" - திருமூலரும்

அதுமட்டுமல்ல எம்பெருமானே அருளாளர்க்கு முதல் அடிஎடுத்துக் கொடுத்தும் உள்ளிருந்து உணர்த்தியும் திருமுறைகள் தனதுரைகயே என்பதனை வெளிக்காட்டியும் இருக்கிறான்.

- 'பித்தா பிறைசூடீ' எனவும் 'தில்லைவாளந்தணர் தம் அடியாரகட்கு' என சுந்தரருக்கும்
- 'உலகெலாம்..' என பெரியபுராணம் பாடுவதற்கு சேக்கிழாருக்கும்
- 'மதிமலிபுரிசை மாடக் கூடல் ..' என 11ஆம் திருமுறைக்குதானே முதல்பதிகம் பாடியும் எடுத்துக் கொடுத்தவர்
- 'நமச்சிவாய' என ஆரம்பித்து மணிவாசகர் சொல்ல 51 திருவாசகப் பதிகங்களையும் தன்கைப்பட எழுதி பாவைபாடிய வாயால் கோவை பாடுக என 400 திருக்கோவையார் பாடலையும் எழுதியவர்.
  - மனிதன்(மணிவாசகர்)பாட இறைவனால் எழுதப்பட்டது திருவாசகம்
  - எம்பெருமானால் எழுதப்பட்டது திருமுகப் பாசுரம். 11ஆம் திருமுறை முதற்பாடல் மதிமலி..
- நால்வர் நம்நோக்கில் –சாராம்சம்

| | ஆட்கொண்டது | பாடியது | பாடல்கள் | உறவு |
|---|---|---|---|---|
| **சம்பந்தர்** | பாலைக்காட்டி | தன்னை | கொஞ்சி | குழந்தை அன்பு |
| **அப்பர்** | சூலைகாட்டி | என்னை இறைவனை | கெஞ்சி | தொண்டன் – பணிவு |
| **சுந்தரர்** | ஓலைகாட்டி | பொன்னை | விஞ்சி | நண்பன் – உரிமை |
| **மணிவாசகர்** | காலைக்காட்டி | மண்ணை மெய்ம்மை | அஞ்சி | மாணவன் – பயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மொத்த தேவாரப்பண்கள் 24
- தமிழில் முதலில் பதிகங்களைப் பாடியவர் காரைக்காலம்மையார்
    - இவரே இசைத்தமிழ் முன்னோடி ஆவர்
    - அருளிய பண்கள்
        - நட்டபாடை
        - இந்தளம்
- தேவாரமுதலிகளுள் (ஒன்று முதல் ஏழாம் திருமுறை வரை பாடியோர்)
    - சம்பந்தர் 23 பண்களும்
    - திருநாவுக்கரசர் 10பண்களும்,
    - சுந்தரர் 17பண்களும் பாடியுள்ளனர்.
- சம்பந்தர் மட்டுமே பாடியுள்ள பண்கள்
    - i. வியாழக்குறிஞ்சி
    - ii. மேகராகக் குறிஞ்சி
    - iii. அந்தாளிக்குறிஞ்சி
    - iv. யாழ்முரி.
    - v. செவ்வழி
- சுந்தரர் மட்டுமே பாடியுள்ள பண் செந்துருத்தி ஆகும்.
- எட்டாம் திருமுறையான மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் மோகனராகம் (முல்லைத் தீம்பாணி) பண்ணில் தொன்று தொட்டுப் பாடப்படுவது மரபு.
- ஒன்பதாம் திருமுறைகளான திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவை சாளரபாணி (ஆனந்தபைரவி) என்ற பண்ணில் பாடப் பட்டு வருகின்றது.
- பன்னிரெண்டாம் திருமுறையான பெரியபுராணம் பெரும்பாலும் செந்துருத்தி பண்ணில் பாடப்பட்டு வருகின்றது.
- தேவாரப்பண்களை யாழிசையில் இசைத்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். இவர் ஞானசம்பந்தரோடு தலப்பயணம் மேற்கொண்டு அவர்தம் பாடல்களுக்கு யாழிசைத்தார்.
- திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த மாதரசி **வள்ளியம்மையார்** (பாடினி) உதவியால் பண்கள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சைவாசீலராக, சிவவேடப்பொலிவுடன் உடற்சுத்தத்துடன், உள்ளச் சுத்தம்(இறைசிந்தனை மட்டும்) உடைச்சுத்தம் உடையவராக திருமுறைகளை ஓதுவதே சிறப்பு.
- ஓதும்போது கலாசார உடை (பெண்கள் சேலை அணிந்து தலை வாரிக் கட்டி —அவிழ்ந்த கூந்தல் ஆகாது), ஆண்கள் வேட்டியும் அதன்மேல் சால்வையும்) அணிதல் வேண்டும்
- சிவதீட்சை பெற்றவராய் இருப்பது சாலச்சிறந்தது
- திருமுறைகள் மந்திரங்களே, இவை இறைவனது சொற்கள். எழுத்துப்பிழை, சொற்பிழை, சொற்றொடர்ப்பிழை, சந்திப்பிழை இல்லாது பாடவேண்டும். பிரித்தல், சேர்த்தல், மழித்தல், போன்றவையால் சொல், பொருள், வரி போன்றவற்றுக்கு பிழைஏற்படாது, பக்திக்குப் பங்கமில்லாது பாடவேண்டும். திருமுறை ஒழுங்கும் பண்முறையும் மாறாது பாடலின் பொருள் உணர்ந்து, பாடற் பொருட்சுத்தம், பாடலுக்கான பண் சுத்தத்துடன் பாடவேண்டும்
- மனனஞ்செய்து பாடுவது சிறந்தது. மனனஞ்செய்ய முடியாதவிடத்து பார்த்துப் படிக்கலாம். மனனஞ் செய்து விட்டோம் என பிழைவிட்டுப்பாடுவது தவறு.
- குறித்த சந்தர்ப்பத்தில் அதற்கான பண்ணில் பாடுவதே சிறப்பு (குறித்த நோய்க்கு குறித்த மருந்து குறித்த பத்தியத்தில் மட்டுமே பாவித்து உரிய பயன்பெறுவது போல)
- வடக்கு முகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும் நின்று கொண்டும் அமர்ந்து (ஆசனம், தர்ப்பைப்பாய், தோய்த்துலர்ந்த துணி போன்றவற்றின்மீது) கொண்டும் பாடலாம். கதிரையில் இருந்து பாடுவதை இயன்றளவு தவிர்க்கலாம். இயலாதவிடத்து கதிரையில் இருந்தாலும் தனது முறை வரும்பொழுது எழுந்துநின்று ஓதுதல் சிறப்பு.
- கூப்பிய கைகளுடன் மெய்யன்புடன் ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் சொல்லி பாடுதல் வேண்டும்
- உரத்தகுரலில் தெளிவாகப் பண்ணுடன் பக்தியுடன் பாடுதல் சிறப்பு
    - சுவாமி சந்நிதானத்தில் முடிந்தவரை ஓர்அடி ஒருதடவையே பாடப்பட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ○ கூட்டுப் பிரார்த்தனையில் சூழலுக்கு ஏற்ப ஒரு தடவைக்குமேல் பாடுவதும் சங்கதிசேர்ப்பதும் தவறில்லை.
- ○ இசை அரங்குகளில் விரும்பியவாறு நிலைமையை அறிந்து அதற்கேற்றவாறு சங்கதிசேர்த்துப் பாடலாம்

- திருமுறைகளை ஓதும்போது உணவு உண்ணல், தொலைபேசியில் கதைத்தல், பிறவிடயங்களை மற்றவர்களுடூன் கதைத்தல், வீண்விதண்டாவாதம் செய்தல் ஆகாது. ஆனால் பாடலில் விளக்கங்கள் கேட்டுத் தெளிவுறலாம்
- மந்திரங்கள் பிறர் காதிற் கேட்காதபடி உச்சரித்தலும் தோத்திரங்களை யாவரும் கேட்குமாறு பண்ணுடனும் நல்லிசைக்கருவிகளுடனும் இசைப்பது சிறப்பு
- திருமுறைகளைப் பாடும்போது அவற்றுக்கான பண்ணுடன் பாடி சிறந்த பலனைப் பெறலாம்
- திருமுறைகள் ஓதுவதில் மூன்று நிலைகள் (செயல்பாடு)
  - ➢ முதல்நிலை – மனனம் செய்யும் முறை, (சந்தம்)
  - ➢ இரண்டாம்நிலை – ஓதும்முறையில் (எளியமுறையில்) பாடுவது,
  - ➢ மூன்றாம் நிலை – இசைஅரங்கு (அரங்கிசை வடிவமைப்பு) – பண்திறன்களை வெளிப்படுத்திப் பாடுவது.
    - ○ முதல்நிலை – பதிகங்களை மனனம்செய்ய இலகுவான முறை
      - ▪ மனன முறை
      - ▪ சந்தமுறையில் பாடுவது
      - ▪ பாராயணம் செய்வதற்கு இலகுவானது
      - ▪ மந்திரமாக ஓதுவது
      - ▪ சிறார்களுக்கு ஆர்வத்தைத் தூண்டக் கூடியது
    - ○ இரண்டாம்நிலை – ஓதும்(எளிய) முறையில் பாடுவது.
      - ▪ சுருதி சுத்தமாகப் பாடுவது
      - ▪ முறையான தாளத்திற்கேற்ப பாடுவது
      - ▪ வார்த்தை சுத்தமமாகப் பாடுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இசை அசைவுகள் அதிகமாக இல்லாமல் சாதாரணமுறையில் பாடுவது
- பாமாலையாக ஓதுதல்
- இறைவன் சந்நிதியில் பாடுதற்கு உகந்த முறை

○ மூன்றாம் நிலை — இசைஅரங்கு (அரங்கிசை வடிவமைப்பு) — பண்திறன்களை வெளிப்படுத்திப் பாடுவது.

- இசை அசைவுகள் வழங்குவது
  - ✓ சங்கதிகளை அமைத்துப் பாடுவது
  - ✓ வெவ்வேறுஅமைப்பிலானசங்கதிகளில் பாடுவது
- தாளக் கட்டுமானங்களை அமைப்பது
  - ✓ இரண்டாம்காலத்தில் (மேற்காலத்தில்) பாடுவது
  - ✓ திஸ்ர நடையில் பாடுவது
  - ✓ இரட்டைக் களையில் பாடுவது

○ கொண்டுகூட்டி பாடும் முறைகளை அமைப்பது

- நிரவல் என்ற ஆளத்தி (ஆலாபனை) முறைமைகளைப் புகுத்துவது
- முடிவற்ற நிலை (பாடுபவரின் குரல்வளமும், இசை அரங்கத்தின் அமைப்பு முறையும் சூழலும் மாற்றங்களை ஏற்படுத்தும்)
- சிருங்காரித்து அலங்காரமாகப் பாடுவது.

○ இம்மூன்று நிலைகளை (முறைமைகளை) பயன்படுத்தக்கூடிய இடங்கள் (சூழல்)

✓ இறைவன் சந்நிதியிலே முதல்நிலை அல்லது இரண்டாம் நிலையில் மட்டுமே பாடவேண்டும்

✓ பஞ்சபுராணம் ஓதும்போது இரண்டாம் நிலையில் அல்லது சுத்தாங்கமாகப் பாடலாம்

✓ கோவில் வழிபாடுகளுக்கிடையில், உட்கார்ந்து அமைதியாக, மூன்றாம் நிலையில் பாடலாம். மூன்றாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் பாடுவதைகேட்டு அனுபவித்து இன்புறும் சூழல் அமையும்.

✓ இசை அரங்குகளில் மூன்றாம் நிலையில் பாடுவது பார்வையாளர்களுக்கு பண்ணிசை விருந்தாக அமையும்.

- நவசந்திப்பண் போன்றவை பண்ணின்படி பாடவேண்டிய பாடல்கள், அதேபண்ணிலேயே பாடவேண்டும். (வரிகளல்ல பண்ணே முக்கியம்)
- திருமுறைகள் 24பண்களில் வகைப்படுத்தப் பட்டுள்ளன. தற்போது பகற்பண்கள், இரவுப்பண்கள், பொதுப்பண்கள் என்றும். பாகுபடுத்தப்பட்டுள்ளது அதன்படி காலநேரமுணர்ந்து பாடுவதுசிறப்பு
- பண் தெரியாது என்பதற்காக பாடாது இருந்து விடக்கூடாது. தொடர்ந்து பயிற்சி செய்துவர இறையருளும் சேர அது கைகூடும்
- பன்னிருதிருமுறை ஓதுதல்
  - பண்முறை, தலமுறை என பகுப்பு முறை மூவர் தேவாரத் திரட்டு உள்ளன. நடைமுறையில் திருமுறை ஒழுங்கில் பண்முறையில் ஓதுவது வழமை.
  - பாராயணகாலம் — ஒருமண்டலம்(48நாள்)அன்றேல் அதன் மடங்கு அன்றி விசேச காலத்தில் உதாரணமாக தைப்பூசத்தில் தொடங்கி பங்குனி உத்தரம் வரை இதுபோன்று பாராயணம் செய்யலாம்
  - பாடும்முறை
    - பண்ணாங்கம் — பண்ணுடன் தாளம் போட்டு பாடலைப் பாடுவது. பண்ணுக்கு ஒரு தேவாரம் என அறிந்துவைத்து அதனடிப்படையில் பாடலை பாடுவது (இத்தொகுப்பு)
    - சுத்தாங்கம் — தாளக்கட்டு இன்றி விருத்தம்போல் பாடுவது. திருவிருத்தம், திருத்தாண்டகம் போன்றவை இம்முறையில் பாடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுவாமி சந்நிதானத்திலே ஓதுதல்
    - திருமுறைக்கு ஒரு பாடல் பாடுதல் —
      பன்னிரு திருமுறைகளிலிருந்தும் ஒவ்வொரு பாடலாக அதே ஒழுங்கில் பாடுதல்
    - பஞ்சபுராணம் பாடுதல்
      பஞ்சபுராணம் எனப்படுவது
      1.தேவாரம் — 1 — 7வரையான திருமுறைகளிலிருந்து ஒரு பாடல்
      2.திருவாசகம் — 8ஆம் திருமுறை திருவாசகத்திலிருந்து ஒரு பாடல்
      3.திருவிசைப்பா — 9ஆம் திருமுறை திருவிசைப்பாவில் இருந்து ஒரு பாடல்
      4.திருப்பல்லாண்டு — 9ஆம் திருமுறைதிருப்பல்லாண்டில் இருந்து ஒரு பாடல்
      5.பெரியபுராணம் — 12ஆம் திருமுறை சேக்கிழார் பெரிய புராணத்திலிருந்து இருந்து ஒரு பாடல்
      இதே ஒழுங்கில் இவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடலையே பாடவேண்டும்.

      இவ் ஐந்துமே பஞ்சபுராணங்கள். மேலதிகமாக திருப்புகழோ, கந்தரலங்காரமோ அன்றி அபிராமி அந்தாதியோ பாடும்போது பெரியபுராணத்தைத் தொடர்ந்து திருச்சிற்றம்பலம் சொல்லி (மனதிற்குள் என்றாலும்) தொடர்வது சிறப்பு.
      மேலும் அத் திருத்தலத்தின் தலபுராணப் பாடல்களைப்பாடி நிறைவாக வாழ்த்தினைச் சொல்லியும் நிறைவு செய்யலாம்.
    - தேவார புராணம் பாடுதல்
      1.தேவாரம் — 1 — 7வரையான திருமுறைகளிலிருந்து ஒரு பாடல்
      2.பெரியபுராணம் — 12ஆம் திருமுறை சேக்கிழார் பெரிய புராணத்திலிருந்து இருந்து ஒரு பாடல்
      என்ற ஒழுங்கில் பாடலைத் தெரிவுசெய்து
      வாழ்த்தினையும் பாடி நிறைவு செய்யலாம்.

எனினும் அவ் ஆலயத்திற்குரிய விதிமுறைகள், நடை முறை களையும் சூழலையும் கருத்திற்கொண்டு அதற்கேற்ப பாடுவதே சிறப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2. மூவர் தேவாரப் பதிகங்களில் பண்ணுக்கு ஒரு பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதிகங்களைக் கேட்பதற்கும் பதிவிறக்கம் செய்யவும் .. ..**

https://drive.google.com/drive/folders/1Cq5iVaApwhgxcad9dhMtWwZF54Cc2GNA?usp=drive_link




பாடும் நிலை

பாடல்எண் (18)

பாடஅலகு

2 - இரண்டாம் வருடம்

16 - 16ஆம் பாடம்

I - முதலாம் நிலை

II - இரண்டாம் நிலை

பண்

பழந்தக்கராகம்

பாடல்

சொன்மாலை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 01

பண் : அந்தாளிக்குறிஞ்சி (சாமா)
அருளியவர்: சம்பந்தர்
தலம்: குருகாவூர் வெள்ளடை

பாடல் : சுண்ண வெண்ணீறணி..
திருமுறை: 3 பதிகம்: 124 பாடல்:1
பாடஅலகு: வருடம் 2/04

திருச்சிற்றம்பலம்

சுண்ண வெண் ணீறணி மார்பில் தோல் புனைந்து
எண்ணரும் பல்கணம் ஏத்தநின்று ஆடுவார்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனி எம் பிஞ்ஞக னாரே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 02

பண் : இந்தளம் (மாயாமாளவகௌளை)
அருளியவர்: சம்பந்தர்
தலம்: திருமருகல்

பாடல் : சடையாய்எனுமால்..
திருமுறை: 2 பதிகம்: 18 பாடல்:1
பாடஅலகு: வருடம் 1/06

திருச்சிற்றம்பலம்

சடையாய் எனுமால் சரண்நீ யெனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 03

பண் : காந்தாரம் (நவரோசு)
பாடல் : மாதர்ப்பிறைக்கண்ணி..
திருமுறை: 4 பதிகம்: 3 பாடல்: 1
அருளியவர்: நாவுக்கரசர்
பாடஅலகு: வருடம் 1/22
தலம்: திரு ஐயாறு

திருச்சிற்றம்பலம்

மாதர்ப் பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும்பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயாறு அடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறியாதன கண்டேன்.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 04

பண் : காந்தாரபஞ்சமம் (கேதாரகௌளை)
பாடல்: சொற்றுணை வேதியன்.. ..
திருமுறை: 4 பதிகம்: 11 பாடல்: 1
அருளியவர்: நாவுக்கரசர்
பாடஅலகு: வருடம் 1/09
தலம்: பொது

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 05

பண் : குறிஞ்சி (அரிகாம்போதி)
பாடல் : முத்து விதான.. ..
திருமுறை: 4 பதிகம்: 21 பாடல்: 1
அருளியவர்: நாவுக்கரசர்
பாடஅலகு: வருடம் 2/18
தலம்: திருஆரூர் (திருவாதிரைத் திருப்பதிகம்)

திருச்சிற்றம்பலம்

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்தலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 06

பண் : கொல்லி (நவரோசு)
பாடல் : மண்ணினல்ல..
திருமுறை:3 பதிகம்: 24 பாடல்:1
அருளியவர்: சம்பந்தர்
பாடஅலகு: வருடம் 1/21
தலம்: சீர்காழி

திருச்சிற்றம்பலம்

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதும் ஓர் குறைவிலை
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 07

பண் : கொல்லிக்கௌவானம் (நவரோசு)
அருளியவர்: சுந்தரர்
தலம்: திருநாகைக்காரோணம்
பாடல் : பத்தூர் புக்கிரந்துண்டு.. ..
திருமுறை: 7 பதிகம்: 46 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 2/18

திருச்சிற்றம்பலம்

பத்தூர் புக்கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசி படிறாடித் திரிவீர்
செத்தார் தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொரு நாளிரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
அவைபுணத் தந்தருளி மெய்க்கிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 08

பண் : கௌசிகம் (பைரவி)
அருளியவர்: சம்பந்தர்
தலம்: திருஆலவாய்
பாடல் : வீடலால வாயிலாய்.. ..
திருமுறை: 3 பதிகம்: 52 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 2/05

திருச்சிற்றம்பலம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 09

பண் : சாதாரி (நவரோசு)
அருளியவர்:சம்பந்தர்
தலம்: திருநெல்வேலி

பாடல் : மருந்தவை மந்திரம்.. ..
திருமுறை: 3 பதிகம்: 92 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 2/15

திருச்சிற்றம்பலம்

மருந்தவை மந்திரம் மறுமைநன்
னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடும் அவர் நாமமே
சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன்
சொரிதர துன்று பைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி
உறை செல்வர்தாமே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 10

பண் : சீகாமரம் (பந்துவராளி)
அருளியவர்: சம்பந்தர்
தலம்: திருவெண்காடு

பாடல் : கண்காட்டு நுதலானும்.. ..
திருமுறை: 2 பதிகம்: 48 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 2/11

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங்கொடியானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 11

பண் : செந்துருத்தி (மத்தியமாவதி)
அருளியவர்: சுந்தரர்
தலம்: திருஆரூர்

பாடல் : மீளாஅடிமை.. ..
திருமுறை: 7 பதிகம்: 95 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 1/ 39

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 12

பண் : செவ்வழி (யதுகுலகாம்போதி)
அருளியவர்: சம்பந்தர்
தலம்: திருக்கேதாரம்

பாடல் : தொண்டரஞ்சு.. ..
திருமுறை: 2 பதிகம்:114 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 2/13

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறு மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யும் இடம் என்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டை பாயச் சுனைநீல மொட்டு அலரும் கேதாரமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 13

பண் : தக்கராகம் (காம்போதி)
அருளியவர்: சம்பந்தர்
தலம்: திருமயிலாடுதுறை

பாடல் : கரவின்றி நன்..
திருமுறை: 1 பதிகம்:38 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 2/04

திருச்சிற்றம்பலம்

கரவின் றி நன்மா மலர்கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரமொன் றிய செஞ் சடையான் வாழ்
வரமா மயிலாடு துறையே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 14

பண் : தக்கேசி (காம்போதி)
அருளியவர்: சுந்தரர்
தலம்: திருக்கச்சி ஏகம்பம்

பாடல் : ஆலந்தான் உகந்து.. ..
திருமுறை: 7 பதிகம்: 61 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 1/37

திருச்சிற்றம்பலம்

ஆலந் தான்உ கந்து அமுதுசெய் தானை
ஆதி யை அம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும் உடை யானைச்
சிந்திப் பார் அவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 15

பண் : நட்டபாடை | பாடல் : அங்கமும் வேதமும்..
(கம்பீரநாட்டை, நாட்டைக்குறிஞ்சி) திருமுறை: 1பதிகம்: 6 பாட1
அருளியவர்: சம்பந்தர் | பாடஅலகு: வருடம் 1/35
தலம்: திருமருகல்

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி ஈச்சரங் காமுறவே..

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 16

பண் : நட்டராகம் | பாடல் : பொன்னார் மேனியனே..
(பந்துவராளி, கல்யாணி) | திருமுறை: 7 பதிகம்: 24 பாடல்: 1
அருளியவர்: சுந்தரர் | பாடஅலகு: வருடம் 1/17
தலம்: திருமழபாடி

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 17

பண் : பஞ்சமம் (ஆகிரி)
அருளியவர்: சம்பந்தர்
தலம்: திருப்பனந்தாள்

பாடல் : கண்பொலி நெற்றியினான்...
திருமுறை: 3 பதிகம்: 62 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 2/14

திருச்சிற்றம்பலம்

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலொர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை ஈச்சரமே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 18

பண் : பழந்தக்கராகம் (ஆரபி, சுத்தசாவேரி)
அருளியவர்: நாவுக்கரசர்
தலம்: திருப்பழனம்

பாடல் : சொன்மாலை பயில்கின்ற.. ..
திருமுறை: 4 பதிகம்: 12 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 2/16

திருச்சிற்றம்பலம்

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண்டு இகழ்வானோ. 1

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 19

பண் : பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)
அருளியவர்: சுந்தரர்
தலம்: திருப்பாண்டிக்கொடுமுடி

பாடல் : மற்றுப் பற்றெனக்கு.. ..
திருமுறை:7 பதிகம்:48 பாட: 1
பாடஅலகு: வருடம் 1/34

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்று எனக்கின்றி நின்
திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேன் இனிப்
பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழுது ஏத்துஞ் சீர்க்கறையூரிற்
பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லும் நா
நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 20

பண் : பியந்தைக்காந்தாரம்
தலம்: பொது (நவரோசு)
அருளியவர்: சம்பந்தர்

பாடல் : வேயுறுதோளிபங்கன்.... ..
திருமுறை: 2 பதிகம்: 85 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 1 பாடம் 15

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 21

பண் : புறநீர்மை (பௌளி)
அருளியவர்: சம்பந்தர்
தலம்: திருகோணமலை

பாடல் : தாயினும் நல்ல ..
திருமுறை: 2 பதிகம்: 123 பாடல்: 5
பாடஅலகு: வருடம் 1/11

திருச்சிற்றம்பலம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோண மா மலை அமர்ந் தாரே

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 22

பண் : மேகராகக்குறிஞ்சி (நீலாம்பரி)
அருளியவர்: சம்பந்தர்
தலம்: திருப்பராய்த்துறை

பாடல் : நீறுசேர்வதொர்.. ..
திருமுறை: 2 பதிகம்:135 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 2/06

திருச்சிற்றம்பலம்

நீறுசேர்வதொர் மேனியர் நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 23

பண் : யாழ்முரி (அடானா) | பாடல் : மாதர் மடப்பிடியும் ..
திருமுறை: 1 பதிகம்: 136 பாடல்: 1
தலம்: திருத்தருமபுரம் | அருளியவர்: சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

மாதர் மடப்பிடி யும்மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதவி னப்படை நின்றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடை நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசை பாடுவர் ஆழ்கடல் வெண்டிரை
இரைந் நுரை கரை பொரு துவிம்மி நின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 24

பண் : வியாழக்குறிஞ்சி | பாடல் : அவ்வினைக்கு இவ்வினை..
அருளியவர்: சம்பந்தர் | திருமுறை:1 பதிகம்: 116 பாடல்: 1
தலம்: திருநீலகண்டம் | பாடஅலகு: வருடம் 2/08

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக்கு இவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம் பிரான்கழல்
போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்து எமைத் தீண்டப் பெறா
திருநீலகண்டம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : i (25)

பண் : திருநேரிசை | பாடல் : கங்கையைச் சடையுள்..
அருளியவர்: நாவுக்கரசர் | திருமுறை: 4 பதிகம்: 38 பாடல்: 1
தலம்: திரு ஐயாறு | பாடஅலகு: வருடம் 1/23

திருச்சிற்றம்பலம்

கங்கையைச் சடையுள் வைத்தார்
கதிர்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார்
திசைதிசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார்
மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார்
ஐயன் ஐயாற னாரே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : ii (26)

பண் : திருவிருத்தம் | பாடல் : ஈன்றாளுமாய் எனக்கு..
அருளியவர்: நாவுக்கரசர் | திருமுறை: 4 பதிகம்: 94 பாடல்: 1
தலம்: திருபபாதிரிப் புலியூர் | பாடஅலகு: வருடம் 2/03

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்தான் மனத் துள் இருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடி
யோங்களுக்கே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : iii (27)

பண் : திருக்குறுந்தொகை பாடல் : அன்னம்பாலிக்கும்..
அருளியவர்: திருநாவுக்கரசர் திருமுறை:5 பதிகம்: 1 பாடல்: 1
தலம்: கோயில் பாடஅலகு: வருடம் 1/18

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோ இப் பிறவியே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : iv (28)

பண் : திருத்தாண்டகம் பாடல் : எல்லாஉலகமும். ..
அருளியவர்: நாவுக்கரசர் திருமுறை: 6 பதிகம்: 38 பாடல்: 7
தலம்: திருவையாறு பாடஅலகு: வருடம் 1/25

திருச்சிற்றம்பலம்

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. விசேட பதிகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 29 - விநாயகர் துதி

பண் : வியாழக்குறிஞ்சி பாடல் : பிடியதன் உருவுமை..
அருளியவர்: சம்பந்தர் திருமுறை: 1 பதிகம்: 123 பாடல்: 5
தலம்: திருவலிவலம் பாடஅலகு: வருடம் 1/02

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடிகணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 30 – முருகன்துதி

பண் : திருக்குறுந்தொகை பாடல் : நங்கடம்பனை..
அருளியவர்: திருநாவுக்கரசர் திருமுறை: 5 பதிகம்: 9 பாடல்: 1
தலம்: திருக்கடம்பூர் பாடஅலகு: 1/3

திருச்சிற்றம்பலம்

நங் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடி யேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 31 -நால்வர் துதி

பண் : நட்டபாடை பாடல் : பூழியர் கோன் ..
அருளியவர்: உமாபதி சிவாசாரியார் பாடஅலகு: 1/01

திருச்சிற்றம்பலம்

பூழியர்கோன் வெப்பு ஒழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல் மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன் தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத் தாள்போற்றி

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 32 - திருவாசகம்

பண் : முல்லை பாடல் : பால்நினைந்தூட்டும்.. ..
தலம்: திருத் தோணிபுரம் திருமுறை:8 பதிகம்: 37 பிடித்தபத்து
அருளியவர்: மாணிக்கவாசகர் பாடஅலகு: வருடம் 1/41

திருச்சிற்றம்பலம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 33- திருவாசகம்

பண் : முல்லை பாடல் : பண்சுமந்த பாடல் பரிசு...
(மோகனம்) திருமுறை: 8 பதிகம்: 8 திருவம்மானை
அருளியவர்: மணிவாசகர் பாடஅலகு: வருடம் 1/41
தலம்: திருவண்ணாமலை

திருச்சிற்ம்பலம்

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 34 – திருக்கோவையார்

பண் : பாடல் : ஆனந்த வெள்ளத்து ..
அருளியவர்: மாணிக்கவாசகர் திருமுறை: 8 பதிகம்: 19 -307
தலம்: திருச்சிற்றம்பலம் பாடஅலகு: வருடம் 1/31

திருச்சிற்றம்பலம்

ஆனந்த வெள்ளத்து அழுந்துமொர்
ஆருயிர் ஈருருக்கொண்டு
ஆனந்த வெள்ளத்து இடைத்திளைத்
தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத்து அறைகழ லோன்
அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றாது முற்றாது
இவ் அணிநலமே.

திருசசிற்றம்பலம்

## பாடல் : 35 – திருவிசைப்பா

பண் : சாளரபாணி பாடல் : ஒளிவளர்விளக்கே..
அருளியவர்: திருமாளிகைத்தேவர் திருமுறை: 9 பதிகம்: 1-1
தலம்: கோயில் பாடஅலகு: வருடம் 1 /42

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 36 -திருவிசைப்பா

பண் : பஞ்சமம் பாடல் : அன்னமாய் விசும்பு. ..
அருளியவர்: கருவூத்தேவர் திருமுறை: 9 பதிகம்: 61-1
தலம்: சோளேச்சரம் பாடஅலகு: வருடம் 1/42

திருச்சிற்றம்பலம்

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னைஆள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை யென்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 37 – திருப்பல்லாண்டு

பண் : சாளரபாணி பாடல் : மன்னுகதில்லை.. ..
தலம்: கோயில் திருமுறை: 9 பதிகம்: 1-1
அருளியவர்: சேந்தனார் பாடஅலகு: வருடம் 1/43

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே
புகுந்து புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்
அடி யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 1

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 38 – திருப்பல்லாண்டு

பண் : | பாடல் : ஆரார்வந்தார்.. ..
அருளியவர்: சேந்தனார் | திருமுறை: 9 பதிகம்: 1-12
தலம்: கோயில் | பாடஅலகு: வருடம் 1/43

திருச்சிற்றம்பலம்

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.12

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 39 – திருமந்திரம்

பண் : திருமந்திரம் | பாடல் : யான்பெற்ற.. ..
அருளியவர்: திருமூலர் | திருமுறை: 10 பதிகம்: 1-85
தலம்: | பாடஅலகு: வருடம் 1/32

திருச்சிற்றம்பலம்

யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் :40-11ஆம் திருமுறை காரைக்காலம்மையார் புராணம்

பண் : நட்டபாடை | பாடல் : கொங்கை திரங்கி.. ..

அருளியவர்: காரைக்காலம்மையார் | திருமுறை: 11 பதிகம்: 2-1

தலம்: ஆலங்காடு | பாட அலகு: வருடம் 1 /33

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள்நீண்டு பரடுயர்
நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி அலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு ஆலங்காடே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 41 – சேக்கிழார் அருளிய பெரிய புராணம்

பண் : நட்டபாடை | பாடல் : அந்நகரில் அமர்ந்து

மத்தியமாவதி | திருமுறை: 12 பதிகம்: 78 (898)

வேறு : திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம்_ வருடம் 1/33

திருச்சிற்றம்பலம்

அந்நகரில் அமர்ந்து அங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்து ஒலிக்கும் ஈழம் தன்னில்
மன்னு திருக்கோண மலை மகிழ்ந்த செங்கண்
மழ விடையார் தமைப் போற்றி வணங்கிப்பாடிச்
சென்னி மதி புனை மாட மாதோட்டத்தில்
திருக் கேதீச் சரத்து அண்ணல் செய்ய பாதம்
உன்னி மிகப் பணிந்து ஏத்தி அன்பரோடும்
உலவாத கிழி பெற்றார் உவகை உற்றார்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 42 - சேக்கிழார் அருளிய பெரிய புராணம்

பண் : இந்தளம் பாடல் : இறவாத இன்ப.. ..
அருளியவர்: சேக்கிழார் திருமுறை: 12 பதிகம்: 80
வேறு : காரைக்காலம்மையார் புராணம் பாடஅலகு: வருடம் 1/33

திருச்சிற்றம்பலம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான்
மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போது உன் அடியின்கீழ்
இருக்க என்றார்

திருச்சிற்றம்பலம்

## பாடல் 43 – திருப்புகழ்

தலம்: கதிர்காமம் பாடல் : மாதர் வசமாயுற்று..
அருளியவர்: அருணகிரிநாதர் பாடஅலகு: வருடம் 1/45

திருச்சிற்றம்பலம்.

மாதர்வச மாயுற்று ...... உழல்வாரும்
மாதவமெ ணாமற் ...... திரிவாரும்
தீதகல ஓதிப் ...... பணியாரும்
தீநரக மீதிற் ...... திகழ்வாரே
நாதவொளி யேநற் ...... குணசீலா
நாரியிரு வோரைப் ...... புணர்வேலா
சோதிசிவ ஞானக் ...... குமரேசா
தோமில் கதிர்காமப் ...... பெருமாளே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 44 - திருப்புகழ்

பண் : திருப்புகழ் பாடல் : விலைக்கு மேனியில்.... ..
அருளியவர்: அருணகிரிநாதர் பாடஅலகு: வருடம் 1/45
தலம்: திருகோணமலை

திருச்சிற்றம்பலம்

விலைக்கு மேனியில் அணிக்கோவை மேகலை
தரித்த வாடையு மணிப்பூணு மாகவெ
மினுக்கு மாதர்க ளிடக்காம மூழ்கியெ ... மயலூறி
மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியெ யுழைத்தேவி டாய்படு... கொடியேனைக்
கலக்க மாகவெ மலக்கூடி லேமிகு
பிணிக்கு ளாகியெ தவிக்காம லேயுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயு...மொருவாழ்வே
கதிக்கு நாதனி யுனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயெனை யருட்பார்வை யாகவெ
கழற்கு ளாகவெ சிறப்பான தாயருள் ... தரவேணும்
மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாள்மகிழ் ... தருவேளே
வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுநி யிடைக்காடர் கீரனும்
வகுத்த பாவினில் பொருட்கோல மாய்வரு... முருகோனே
நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணாமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் ... வருவோனே
நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ
யெடுத்த வேல்கொடு பொடித்தூள தாஎறி
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி ... பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 45 -கந்தரனுபூதி

பண் : பாடல் : ஆடும் பரிவாய்.... ..

அருளியவர்: அருணகிரிநாதர் பாடஅலகு: வருடம் 1/47

திருச்சிற்றம்பலம்

ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானைச் சகோதரனே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 46 -கந்தரலங்காரம்

பண் : பாடல் : அழித்துப்பிறக்க ஒட்டா ..

அருளியவர்: அருணகிரிநாதர் பாடஅலகு: வருடம் 1/47

திருச்சிற்றம்பலம்

அழித்துப் பிறக்கஒட்டா அயில்வேலன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர் எரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்கு வெங்கூற்றன் விடுங் கயிற்றால்
கழுத்திற் சுரக்கிட்டு இருக்குமன்றோ கவி கற்கின்றதே..

விழிக்குத்துணை மென்மலர்ப்பாதங்கள் மென்மை குன்றா
மொழிக்குத்துணை முருகாஎனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத்துணையவன் பன்னிருதோளும் பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே..

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 47 - அபிராமி அந்தாதி

பாடல் : தனம்தரும் .. பதிகம்: அபிராமிஅந்தாதி
அருளியவர்: அபிராமிப்பட்டர் பாடஅலகு: வருடம் 1/47

திருச்சிற்றம்பலம்

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில்
வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே *69*

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 48- அபிராமிப் பதிகம்

பாடல் : கலையாத கல்வியும் .. பதிகம்: அபிராமி அம்மைப் பதிகம்
அருளியவர்: அபிராமிப்பட்டர் பாடஅலகு: வருடம் 1/47

திருச்சிற்றம்பலம்

கலையாத கல்வியும் குறையாத வயதும்
ஓர் கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத
மனைவியும் தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்
ஒரு துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவி பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 49 -சகலகலாவல்லிமாலை

நவராத்திரி காலங்களில் முழுப்பதிகமும் பாடப்படுவது

பாடல் :வெண்டாமரைக்கன்றி .. பதிகம்:சகலகலாவல்லிமாலை

அருளியவர்: குமரகுருபரர் பாடஅலகு: வருடம்1/47

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்க என்வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோ சகம் ஏழுமளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. 1

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 50- திருப்பள்ளியெழுச்சி

தினமும் அதிகாலையில், முக்கியமாக மார்கழி மாதத்தில் சுவாமியைத் துயிலெழுப்புவதற்காகப் பாடப்படுவது. பஜனையாக குழுவாக வீதி ஊர்வலமாக நடைபவனியாக முழுப்பதிகமும் பாடப்பட்டு வருவதும் உண்டு

பாடல் : போற்றியென் வாழ்முதலாகிய.. தலம்:திருப்பெருந்துறை

திருமுறை: 8 பதிகம்: 20 பாடல்: 1 அருளியவர்: மாணிக்கவாசகர்

பாடஅலகு: வருடம் 2/ 30

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுதோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறை உறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய் எனை யுடையாய்
எம்பெரு மான் பள்ளி எழுந்தருளாயே. 1

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 51- திருவெம்பாவை

மார்கழி மாதத்தில் நடராஜர் சந்நிதியில் அன்றேல் வசந்த மண்டபத்தில் முழுப்பதிகமும் பாடப்படுவது பஜனையாக குழுவாக வீதி ஊர்வலமாக நடைபவனியாக முழுப்பதிகமும் பாடப்பட்டு வருவதும் உண்டு

பாடல் : ஆதியும் அந்தமும் .... தலம்: திருவண்ணாமலை..

அருளியவர்: மாணிக்கவாசகர் திருமுறை: 8 பதிகம்: 07

பாடஅலகு: வருடம் 2/29

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 52 – திருஇலிங்கக்குறுந்தொகை

திருமாலும் பிரம்மனும் அடிமுடி காணாது தவித்தபோது நான் இங்குற்றேன் என்று இலிங்கரூபத்தில் காட்சி கொடுத்ததைக் கூறுவது.
மகாசிவராத்திரி தினத்தன்று அர்த்த பூசையின்போது இலிங்கோற்சவ புண்ணிய காலத்திலே (பி.இ 11.36 முதல் 12.24 வரை) பாடப்படும் பதிகம்

பண் : பழம்பஞ்சுரம் பாடல் : புக்கணைந்து.... ..
அருளியவர்: நாவுக்கரசர் திருமுறை: 5 பதிகம்: 95 பாடல்: 1
தலம்: திருஆலவாய் அருளியவர்: நாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

புக்க ணைந்து புரிந்தலர் இட்டிலர்
நக்க ணைந்து நறுமலர் கொய்திலர்
சொக்க ணைந்த சுடரொளி வண்ணனை
மிக்குக் காணலுற் றார் அங்கு இருவரே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 53 திருக்கதவு திறக்கப் பாடுவது

| | |
|---|---|
| பண் : திருக்குறுந்தொகை | பாடல் : பண்ணினேர் மொழியாள்.... |
| அருளியவர்: நாவுக்கரசர் | திருமுறை: 5 பதிகம்: 10 பாடல்: 1 |
| தலம்: திருமறைக்காடு | பாடஅலகு: வருடம் 1/29 |

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 54 திருக்கதவு பூட்டப்பாடுவது

| | |
|---|---|
| பண் : இந்தளம் | பாடல் : சதுரம் மறைதான்.... .. |
| அருளியவர்: சம்பந்தர் | திருமுறை: 2 பதிகம்: 37 பாடல்: 1 |
| தலம்: திருப்பெருந்துறை | பாடஅலகு: வருடம் 2/09 |

திருச்சிற்றம்பலம்

சதுரம் மறைதான் துதிசெய் து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறை மைந்தா
இதுநன்கு இறைவைத்து அருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே. 1

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. உற்சவகாலங்களின்போது பாடப்படுபவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடியேற்ற வைபவத்தின்போது கொடி ஏற்றும் போது கொடித்தம்பத்துக்கு அருகில் பாடும் திருமுறைகள்

### பாடல் : 55
### மூலாதார கணபதி

பண் : தக்கராகம் பாடல் : வைத்தனன் தனக்கே.... ..
தலம்: திருப்பாச்சிலாச்சிரமம் திருமுறை: 7 பதிகம்: 14 பாடல்: 1
அருளியவர்: சுந்தரர் பாடஅலகு: வருடம் 2/22

திருச்சிற்றம்பலம்

வைத்தனன் தனக்கே தலையுமென் னாவும்
நெஞ்சமும் வஞ்சமொன்று இன்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக்கு அடிமை
உரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச் சிராமத்து எம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்சில ராகில்
இவரலாது இல்லையோ பிரானார்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 56
### மூஷிக தேவர்

பண் : காந்தாரபஞ்சமம்
அருளியவர்: சம்பந்தர்
தலம்: திருவாவடுதுறை

பாடல் : இடரினும் தளரினும்.... ..
திருமுறை: 3 பதிகம்: 4 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 1 பாடம் 24

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 57
### இடபதேவர்

பண் : காந்தாரபஞ்சமம்
அருளியவர்: நாவுக்கரசர்
தலம்: பொது

பாடல் : இல்லக விளக்கது..
திருமுறை: 4 பதிகம்: 4 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 1/09

திருச்சிற்றம்பலம்

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 8

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 58
### சிம்ம தேவர்

பண் : நட்டபாடை — பாடல் : தோடுடையசெவியன்....
அருளியவர்:சம்பந்தர் — திருமுறை: 1 பதிகம்: 1 பாடல்: 1
தலம்: சீர்காழி — பாடஅலகு: வருடம் 1/05

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவியன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடைய பிர மா புரமேவிய பெம்மானிவனன்றே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 59
### மயூர தேவர்

பண் : இந்தளம் — பாடல் : நெய்யும்பாலும்....
அருளியவர்: சுந்தரர் — திருமுறை: 7 பதிகம்: 5 பாடல்: 1
தலம்: திருஓணகாந்தன்தனி — பாடஅலகு: வருடம் 2 பாடம் 22

திருச்சிற்றம்பலம்

நெய்யும் பாலும் தயிருங் கொண்டு
நித்தல் பூசை செய்ய லுற்றார்
கையில் ஒன்றுங் காணம் இல்லைக்
கழல டி தொழுது உய்யின் அல்லால்
ஐவர் கொண்டிங்கு ஆட்ட ஆடி
ஆழ்கு ழிப்பட்டு அழுந்து வேனுக்கு
உய்யு மாறொன்று அருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளியு ளீரே. 1

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 60 - கொடிக்கவி

சிதம்பரத்திலே நடராசப் பெருமானின் கொடியேற்ற உற்சவத்தின்போது கொடித்தம்பத்தில் உயரேஏறாமல் கீழேவிழுந்த கொடிச்சேலை உமாபதி சிவாசாரியார் இப்பதிகத்தைப் பாடியதும் தானாகவே ஏறியது. அன்றிலிருந்து ஆலயங்களின் கொடியேற்றத்தின் போது பாடப்பட்டு வருவது.

பண் : பாவடிவம் பாடல் : ஒளிக்கும்.... ..
அருளியவர்: உமாபதிசிவாசாரியார் தலம்: சிதம்பரம்
திருமுறை: மெய்கண்டசாத்திரம்

திருச்சிற்றம்பலம்

ஒளிக்கும் இருளுக்கும்ஒன்றே இடம் என்று மேலிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருளடராது உள் ளுயிர்க் குயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிக் கொடி கட்டினனே. 1

பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருளாம் வெளியே திரவே — தருளாளா
நீபுரவா வையமெலா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி. 2

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலுந்
தாக்காது உணர்வரிய தன்மையனை — நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிறியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி. 3

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்தும் நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையுங்
கூசாமற் காட்டாக் கொடி. 4

அந்த மலமறுத்திங் கான்மாவைக் காட்டியதற்
கந்த அறிவை அறிவித்தங்கு — இந்தறிவை
மாறாமல் மாற்றி மருவு சிவப் பேறென்றுங்
கூறாமல் கூறக் கொடி. 5

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவசந்திப் பாடல்கள்

### கொடியேற்றத்தின் போதும் கொடியிறக்கத்தின் போதும் சுவாமி வீதிவலம் வரும்போது வெளிவீதியில் பண்ணுடன் பாடப்படுபவை

### 1. பிரம்ம சந்தி – ஆலயமத்தி – மேகராகக்குறிஞ்சி

பாடல் : 61

பண் : மேகராகக்குறிஞ்சி பாடல் : நீறுசேர்வதோர்..
அருளியவர்: சம்பந்தர் திருமுறை: 1 பதிகம்: 35-11
தலம்: திருப்பராய்த்துறை பாடஅலகு: வருடம் 2/06

திருச்சிற்றம்பலம்

நீறுசேர்வதொர் மேனியர் நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே. 1

திருச்சிற்றம்பலம்

### 2. இந்திர சந்தி – கிழக்கு – காந்தாரம்

பாடல் : 62

பண் : காந்தாரம் பாடல் : மந்திரமாவது நீறு ..
அருளியவர்: சம்பந்தர் திருமுறை: 2 பதிகம்: 66 பாடல்: 1
தலம்: திருஆலவாய் பாடஅலகு: வருடம் 1/07

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர்வாய் உமை பங்கன் திருஆலவாயான்
திருநீறே. 1

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.அக்கினிசந்தி – தென்கிழக்கு – கொல்லி

### பாடல் : 63

பண் : கொல்லி
அருளியவர்: சுந்தரர்
தலம்: திருப்புகலூர்

பாடல் : தம்மையே புகழ்ந்து ..
திருமுறை: 7 பதிகம்: 34 பாடல்: 1
பாடஅலகு: வருடம் -2/24

திருச்சிற்றம்பலம்

தம்மையேபுகழ்ந்து இச்சைபேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதரும் சோறுங்கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள்வதற்கு யாதும்
ஐயுறவு இல்லையே.

திருச்சிற்றம்பலம்

## 4. இயமசந்தி – தெற்கு – கௌசிகம்

### பாடல் : 64

பண் : கௌசிகம்
அருளியவர்: சம்பந்தர்
தலம்: திருஆலவாய்

பாடல் : வீடலாலவாயிலாய் ..
திருமுறை: 3 பதிகம்: 52 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 2/05

திருச்சிற்றம்பலம்

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. நிருதிசந்தி – தென்மேற்கு – நட்டபாடை

### பாடல் : 65

பண் : நட்டபாடை | பாடல் : அங்கமும் வேதமும்..
அருளியவர்: சம்பந்தர் | திருமுறை: 1 பதிகம்: 6-1
தலம்: திருமருகல் | பாடஅலகு: வருடம் 1 -35

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லாற்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 1

திருச்சிற்றம்பலம்

## 6.வருணசந்தி – மேற்கு – சீகாமரம்

### பாடல் : 66

பண் : சீகாமரம் | பாடல் : கண்காட்டு நுதலானும்..
அருளியவர்: சம்பந்தர் | திருமுறை: 2 பதிகம்: 48-2
தலம்: திருவெண்காடு | பாடஅலகு: வருடம் 2 /11

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும்
விடைகாட்டுங் கொடியானே. 1

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. வாயு சந்தி – வடமேற்கு – தக்கேசி

### பாடல் : 67

பண்: தக்கேசி பாடல் : பூவார்மலர்கொண்டு..
அருளியவர்: சம்பந்தர் திருமுறை: 1 பதிகம்: 69 -1
தலம்: திருஅண்ணாமலை பாடஅலகு: வருட 2/07

திருச்சிற்றம்பலம்

பூவார்மலர்கொண்டு அடியார்தொழுவார்
புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள் செய்தார்
தூமாமழை நின்றதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந்து அணையுஞ்சாரல்
அண்ணாமலையாரே. 1

திருச்சிற்றம்பலம்

## 8. குபேரசந்தி – வடக்கு – தக்கராகம்

### பாடல் : 68

பண்: தக்கராகம் பாடல் : வைத்தனன் தனக்கே..
அருளியவர்: சுந்தரர் திருமுறை:07 பதிகம்: 14 பாடல்: 1
தலம்:திருப்பாச்சிலாச்சிராமம் பாடஅலகு: வருடம் 2/23

திருச்சிற்றம்பலம்

வைத்தனன் தனக்கே தலையுமென் னாவும்
நெஞ்சமும் வஞ்சமொன்று இன்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக்கு அடிமை
உரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச் சிராமத்து எம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்சில ராகில்
இவரலாது இல்லையோ பிரானார். 1

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. ஈசானசந்தி – வடகிழக்கு – சாதாரி (சாளரபாணி)

### பாடல் : 69

பண்: சாதாரி | பாடல் : கோழைமிடறாக..
அருளியவர்: சம்பந்தர் | திருமுறை: 3 பதிகம்: 71 பாடல்: 1
தலம்: திருவைகாவூர்

திருச்சிற்றம்பலம்

கோழைமிடறாக கவி கோளுமிலவாக
இசை கூடும் வகையால்
ஏழை அ டியாரவர்கள் யாவை சொன சொல்
மகிழும் ஈசனிடமாம்
தாழையிள நீர் முதிய காய் கமுகின் வீழ
நிரை தாறு சிதறி
வாழையுதிர் வீழ் கனிகள் ஊறிவயல்
சேறு செயும் வைகாவிலே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 70- - திருப்பொற்சுண்ணம்

தீர்த்தத் திருவிழாவிலன்று சுவாமிக்கான அபிசேகக்கூட்டு (சுண்ணப் பொடி) உரலில் இட்டு உலக்கையால் இடிக்கும்போது முழுப்பதிகமும் பாடப்படுவது

பாடல் : முத்துநல்தாமம் பூ.. .. திருமுறை: 8 பதிகம்:9
தலம்: தில்லை அருளியவர்: மாணிக்கவாசகர்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 71- திருப்பொன்னூசல்

ஆலயங்களில் அங்குள்ள மூர்த்தியை திருஊஞ்சலில் வைத்து ஆட்டும்போது பாடப்படுவது

பாடல் : சீரார் பவளங்கால்.. திருமுறை:8 பதிகம்:பொன்னூசல்16
தலம்: தில்லை அருளியவர்: மாணிக்கவாசகர்

திருச்சிற்றம்பலம்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தா ளிணைபாடிப்
போரார் வேற்கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ.1

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. நால்வர் சிறப்பு பதிகங்கள்

குருபூசைத் தினங்களில் பின்வரும் சிறப்புப் பதிகங்களை முழுமையாக ஓதுவது முறைமை

1. முதற்பதிகம்
2. நிறைவுப் பதிகம் — முத்தியடைந்த பதிகம்
3. அவரவர் முழுப்பதிகத்துக்குமான பதிகம் — இப்பதிகத்தினை ஓதினால் அவரவர் பாடிய முழுப்பதிகங்களையும் படித்த பலன் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 72

நால்வர் முதற்பதிகம் – சம்பந்தர் – ஞானப்பால் உண்டமை

பண் : நட்டபாடை | பாடல் : தோடுடையசெவியன்.... ..
அருளியவர்: சம்பந்தர் | திருமுறை: 1 பதிகம்: 1
தலம்: திருப்பிரமபுரம் | பாடஅலகு: வருடம் 1/04

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன்விடை ஏறி ஓர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசி என் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந்து ஏத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மான் இவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடு ஏனமுளைக்கொம்பவை பூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்து எனது உள்ளங்கவர் கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால்தொழு தேத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மான் இவ னன்றே.2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர் கள்வன்
ஊர்பரந்த உல கின்முதலாகிய ஓரூரிது என்னப்
பேர்பரந்தபிர மாபுரம்மேவிய பெம்மான் இவ னன்றே. 3

விண்மகிழ்ந்தமதில் எய்ததுமன்றி விளங்குதலை யோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தெனது உள்ளங்கவர் கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரை மார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மான் இவனன்றே. 4

ஒருமைபெண்மையுடையன்சடையன் விடையூரும்இவ னென்ன
அருமையாகவுரை செய்யஅமர்ந்தெனதுஉள்ளங்கவர் கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்த தோர்காலம் இதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரம்மேவிய பெம்மான் இவனன்றே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைகலந்தஒலி பாடலோடாடலர் ஆகிமழு வேந்தி
இறைகலந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர் கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர் சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரம்மேவிய பெம்மான் இவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்அனலன்எரி வீசிச்சதிர் வெய்த
உடைமுயங்கும்அர வோடுழிதந்தெனது உள்ளங்கவர் கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானல்அம் பொன்னஞ்சிற கன்னம்
பெடைமுயங்குபிர மாபுரம்மேவிய பெம்மான் இவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளை வித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றெனது உள்ளங்கவர் கள்வன்
துயரிலங்கும்உல கிற்பலஊழிகள் தோன்றும்பொழு தெல்லாம்
பெயரிலங்கு பிரமாபுரம்மேவிய பெம்மான் இவ னன்றே. 8

தாணுதல் செய்திறை காணியமாலொடு தண்டாமரை யானும்
நீணுதல் செய்தொழி யந்நிமிர்ந்தானெனது உள்ளங்கவர் கள்வன்
வாணுதல் செய்மகளீர் முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல் செய்பிரமாபுரம்மேவிய பெம்மர் இவ னன்றே. 9

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறி நில்லா
ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தெனது உள்ளங்கவர் கள்வன்
மத்தயானைமறுகவ்வுரி போர்த்ததோர் மாயம்இது வென்னப்
பித்தர்போலும்பிர மாபுரம்மேவிய பெம்மான் இவ னன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர் மேய
பெருநெறியபிர மாபுரம்மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்உரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல்எளி தாமே.11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 73

நால்வர் முதற்பதிகம் – நாவுக்கரசர் – சூலைநோய் நீங்கிய பதிகம்

பண் : கொல்லி பாடல் : கூற்றாயினவாறு.... ..

அருளியவர்: நாவுக்கரசர் திருமுறை: 4 பதிகம்: 1

தலம்: திருஅதிகைவீரட்டானம் பாடஅலகு: வருடம் 1/03

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 1

நெஞ்சம் உமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம் இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென் னீர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 2

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்டு
அணிந்தீரடி கேள்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம்மடி யேன்அறி யாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கடன் ஆவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 4

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது ஒப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 5

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 6

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவலி லாமையினால்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்தேயென் வயிற்றின கம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னாத்துறை அம்மானே. 7
வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்று மிலாமையினாற்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 8
பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பே கவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை இனித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பேஅமை யும்மதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 9
போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்மெழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 74

### நால்வர் முதற்பதிகம் – சுந்தரர்

( திருமணத்தில் கிழப்பிராமணராக வந்து ஆட்கொள்ளப்பட்டபதிகம்)

பண் : இந்தளம் பாடல் : பித்தாபிறைசூடீ.... ..

அருளியவர்: சுந்தரர் திருமுறை: 7 பதிகம்: 1 பாடல்: 1

தலம்:திருவெண்ணெய் நல்லூர் பாடஅலகு: வருடம் 1/07

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடீ பெருமானே அருளாளா
எத்தான்மற வாதே நினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 1

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
ஆயாஉனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே. 2

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அன்னேஉனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே. 3

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யே உரைப்பேனைக் குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அடிகேளுனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம்பணி வார்கள்பெறும் பண்டம்மது பணியாய்
ஆதன்பொருள் ஆனேன்அறி வில்லேன் அருளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
ஆதீஉனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே 5

தண்ணார்மதி சூடீதழல் போலும்திரு மேனீ
எண்ணார்புரம் மூன்றும்எரி உண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அண்ணாஉனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே 6

ஊனாய்உயிர் ஆனாய்உடல் ஆனாய்உல கானாய்
வானாய்நிலன் ஆனாய்கடல் ஆனாய்மலை ஆனாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
ஆனாய்உனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே. 7

ஏற்றார்புரம் மூன்றும்எரி உண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரிவேனோ செக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
ஆற்றாயுனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே. 8

மழுவாள்வலன் ஏந்தீமறை ஓதீமங்கை பங்கா
தொழுவார்அவர் துயர்ஆயின தீர்த்தல்உன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அழகாஉனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே. 9

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன்எனல் ஆமே. 10

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 75

### நால்வர் முதற்பதிகம் – மணிவாசகர்

### சிவபுராணம்

பண் : பாடல் : நமச்சிவாய வாழ்க.... ..

அருளியவர்: மணிவாசகர் திருமுறை: 8 பதிகம்: 1 பாடல்: 1

தலம்: திருப்பெருந்துறை பாடஅலகு: வருடம் 1/11

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப்புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்
தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார்
தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத
நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 76

நாயன்மார் முத்திப்பேறுபெற்ற திருப்பதிகம் – சம்பந்தர்

பண் : கௌசிகம் பாடல் : காதலாகி கசிந்து..

அருளியவர்: சம்பந்தர் திருமுறை: 3 பதிகம்: 49 பாடல்: 1

தலம்: பொது பாடஅலகு: வருடம் 2/35

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்து கண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 1

நம்பு வார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது ஒப்பது
செம்பொ னார் தில கம் உல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வம் மிகப்பெரு கிந் நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே. 3

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே. 6

நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய் வாயினராயின் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே. 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவா ய எனும்
சந்தை யாற் தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் ஏத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 77 -நாயன்மார் இறுதிப்பதிகம் – நாவுக்கரசர்

பண் : திருத்தாண்டகம் பாடல் : எண்ணுகேன் என்சொல்லி...
அருளியவர்: நாவுக்கரசர் திருமுறை: 6 பதிகம்: 99 பாடல்: 1
தலம்: பொது பாடஅலகு: வருடம் 2/35

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 1

அங்கமே பூண்டாய் அனல் ஆடினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடை யினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணார் இன்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேல் தரவ றுத்தாய்
அவர்வேண்டும் காரியமிங்கு ஆவ தில்லை
பொய்யுரையா து உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க்கு என்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 4

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டனங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 5

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தாய் என்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 6

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாம்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 7

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோல் உடையா மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 8

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தி
தன்னனையுந் தண்மதியும் பாம்பும் நீரும்
சடைமுடிமேல் வைத்து உகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
யக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 9

ஒருவனையும் அல்லாது உணராது உள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத்து உள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க்கு இல்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீது ஓடாமைக் காலால் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 78

### நாயன்மார் இறுதிப்பதிகம் – சுந்தரர்

பண் : பஞ்சமம் — பாடல் :தானெனை முன்படைத்தான்.

அருளியவர்: சுந்தரர் — திருமுறை:7 பதிகம்: 100 பாடல்: 1

தலம்: திருநொடித்தான்மலை பாடஅலகு: வருடம் 2/28

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத் தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந் தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ள மத்த யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித் தான்மலை உத்தமனே. 1

ஆனை உரித்தபகை அடி யேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளி யானை நினைந்திருந்தேன்
வானை மதித்து அமரர் வலஞ் செய்தெனை ஏறவைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித் தான்மலை உத்தமனே ..2

மந்திரம் ஒன்றறியேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசே செயுந் தொண்டன்எனை
அந்தர மால்விசும்பில் அழ கானை அருள்புரிந்த
துந்தர மோநெஞ்ச மே நொடித் தான்மலை உத்தமனே ..3

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார் தங்கள் வல்வினைப்பட்டு
ஆழ முகந்த என்னை அது மாற்றி அமரரெல்லாம்
சூழ அருள் புரிந்து தொண்டனேன் பரமல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித் தான்மலை உத்தமனே.. 4

மண்ணுல கிற் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன்இன்று
கண்டொழிந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுல கத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித் தான்மலை உத்தமனே..5

அஞ்சினை ஒன்றிநின்று அலர் கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமே வைகி வானநன் னாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்ட னேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித் தான்மலை உத்தமனே..6

நிலைகெட விண்ணதிர நிலம் எங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானைஏறி வழி யே வரு வேனெதிரே
அலைகட லால்அரையன் அலர் கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலை அணை யாதவண்ணம் நொடித் தான்மலை
உத்தமனே..7

அரவொலி ஆகமங்கள் அறி வார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெ லாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழி தந்தெனக்கு ஏறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித் தான்மலை உத்தமனே ..8

இந்திரன் மால்பிரமன் எழி லார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்த யானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன் ஆர்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித் தான்மலை உத்தமனே.. 9

ஊழிதொ றூழிமுற்றும் உயர் பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவை நாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன் தமிழால் இசைந்து ஏத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே ..10

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் :79

### நாயன்மார் இறுதிப்பதிகம் – மணிவாசகர்

பண் : பாடல் : முத்திநெறி அறியாத
அருளியவர்: மணிவாசகர் திருமுறை: 8 பதிகம்: 51 பாடல்: 1
தலம்: தில்லை பாடஅலகு: வருடம் 2/28

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. ..1

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.2

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. ..3

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட்டு என்னை உந்தன்
சுண்ணவெண்ணீறு அணிவித்து
தூய்நெறியே சேரும் வண்ணம்
அண்ணல்எனக்குஅருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே..4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்று
அஞ்சேல்என் றருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 5

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்து எனையாண்டு பரிசற என் துரிசும் அறுத்து
அந்தம் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.6

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்து உட்பொருளை
ஐயன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.. 7

சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக்க அணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. ..8

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.9

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 80

### முழுப்பதிகமும் ஓதிய பலன் கிடைக்க – சம்பந்தர் திருவெழுக்கூற்றிருக்கை

பண் : வியாழக்குறிஞ்சி
அருளியவர்: சம்பந்தர்
தலம்: சீர்காழி

பாடல் : ஓருருவாயினை.... ..
திருமுறை: *1* பதிகம்: 120 பாடல்: 1
பாட அலகு: வருடம்; 1

திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை 1
ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம் 2
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக் 3
கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோடு
இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை 5
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூவுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை 6
வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை 7
ஐயுறும்அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும் 8
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும் 9
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லைநீள் நிலத்தே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 81

### முழுப்பதிகமும் ஓதிய பலன் கிடைக்க – நாவுக்கரசர்

### திருஅங்கமாலை

பண் : சாதாரி
அருளியவர்: நாவுக்கரசர்
தலம்: பொது

பாடல் : தலையே நீ வணங்காய்.... ..
திருமுறை: 4 பதிகம்: 1 பாடல்: 1
பாடஅலகு: வருடம் 1/8

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய் — தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லே பலி தேரும் தலைவனைத்
தலையே நீவணங்காய். 1

கண்காள் காண்மின்களோ — கடல்
நஞ்சுண்ட கண்டன்தன்னை
எண்தோ ள் வீசிநின்று ஆடும் பிரான்தன்னைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ — சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான் திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீமுரலாய் — முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய் — மத
யானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்து ஆடும் பிரான் தன்னை
வாயே வாழ்த்துகண்டாய். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சே நீநினையாய் — நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீநினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர் — கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். 7

ஆக்கை யாற் பயனென் — அரன்
கோயில் வலம்வந்து
பூக்கை யால் அட்டிப் போற்றி யென்னாதஇவ்
ஆக்கை யாற்பயனென். 8

கால்க ளாற்பயனென் — கறைக்
கண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென். 9

உற்றார் ஆருளரோ — உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால் நமக்கு
உற்றார் ஆருளரோ. 10

இறுமாந்து இருப்பன்கொலோ — ஈசன்
பல்கணத்து எண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்கு
இறுமாந்து இருப்பன் கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன் — திரு
மாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டுகொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 82

### முழுப்பதிகமும் ஓதிய பலன் கிடைக்க – சுந்தரர்
### திருத்தொண்டத் தொகை

பண் : கொல்லிக் கௌவாணம் பாடல் : தில்லைவாழ் அந்தணர்தம்..
அருளியவர்: சுந்தரர் திருமுறை: 7 பதிகம்: 1 பாடல்: 1
தலம்: திருஆரூர் பாடஅலகு: வருடம் 1/12

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கு அடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க்கு அடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

மும்மையால் உலகு ஆண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்தன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க்கு அடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 4

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க்கு அடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க்கு அடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க்கு அடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க்கு அகடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டு இருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் எல்லார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க் கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே. 11

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 83

### முழுப்பதிகமும் ஓதிய பலன் கிடைக்க – மணிவாசகர் சிவபுராணம்

| | |
|---|---|
| பண் : | பாடல் : நமச்சிவாய வாழ்க.... .. |
| அருளியவர்: மணிவாசகர் | திருமுறை: 8 பதிகம்: 1 பாடல்: 1 |
| தலம்: திருப்பெருந்துறை | பாடஅலகு: வருடம் 1 பாடம் 11 |

(பாடல் 75 ஐ பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. இலங்கை பாடல்பெற்ற திருத்தல திருப்பதிகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 84

### இலங்கை பாடல்பெற்ற திருத்தலப் பதிகங்கள் – திருகோணேச்சரம்

பண் : புறநீர்மை பாடல் : நிரைகழலரவம்.... ..
அருளியவர்: சம்பந்தர் திருமுறை: 3 பதிகம்: 95 பாடல்: 1
தலம்: திருக்கோணேச்சரம் பாட அலகு: வருடம் 1 பாடம் 11

(1,4, 6, 8,9, 11ஆம் பாடல்கள்)

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோண மா மலை அமர்ந் தாரே. 1

பழித்திளங் கங்கை சடைமுடி வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடற் தரளம்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்து வன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோண மா மலை அமர்ந் தாரே. 4

பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்து அவற் கருளும்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேங்கைவண் செருந்தி செண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோண மா மலை அமர்ந் தாரே. 6

எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோண மா மலை அமர்ந் தாரே. 8

அருவரா தொருகை வெண்தலை ஏந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவராய் உறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோண மா மலை அமர்ந் தாரே. 9

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலை அமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலை ஈரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. 11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 85

### இலங்கை பாடல்பெற்ற திருத்தலப் பதிகங்கள் – திருக்கேதீச்சரம்

பண் : நட்டராகம் பாடல் : விருதுகுன்றமா மேரு.... ..
அருளியவர்: சம்பந்தர் திருமுறை:2 பதிகம்: 95 பாடல்: 1
தலம்: திருக்கேதீச்சரம் பாடஅலகு: வருடம் 1/29

(1,2, 3, 5,7,11ஆம் பாடல்கள்)

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவில் நாண் அர
வாஅனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்று
உறைபதி எந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்ற கே தீச்சரங் கைதொழக்
கடுவினை அடையாவே. 1

பாடல் வீணையர் பலபல சரிதையர்
எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்ட நஞ்சு
உண்டு இருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினில்
எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாத கே தீச்சரங் கைதொழக்
கெடும் இடர் வினைதானே. 2

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினர்
அறைகழல் சிலம்பு ஆர்க்கச்
சுண்ணம் ஆதரித்து ஆடுவர் பாடுவர்
அகந்தொறும் இடுபிச்சைக்கு
உண்ணல் ஆவதோர் இச்சையின் உழல்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரு மாதோட்டத்து
அண்ணல் நண்ணு கே தீச்சரம் அடைபவர்க்கு
அகருவினை யடையாவே. 3

நல்லர் ஆற்றவும் ஞானநன் குடையர்தம்
அடைந்தவர்க்கு அருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்து
எல்லை யில்புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்து ஏத்தி
அல்லல் ஆசறுத்து அரனடி யிணைதொழும்
அன்பராம் அடியாரே. 5

பண்டு நால்வருக்கு அறமுரைத்து அருளிப்பல்
உலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடல் இடங் கைதொழக்
காதலித்து உறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய அருள்செய்
கே தீச்சர மதுதானே. 7

மாடெ லாமண முரசெனக் கடலினது
ஒலிகவர் மாதோட்டத்(து)
ஆடலேறுடை அண்ணல் கே தீச்சரத்து
அடிகளை அணிகாழி
நாடு ளார்க்கு இறை ஞானசம் பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே. 11

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 86

### இலங்கை பாடல்பெற்ற திருத்தலப் பதிகங்கள் – திருக்கேதீச்சரம்

பண் : நட்டபாடை — பாடல் : நத்தார்படை.... ..
அருளியவர்: சுந்தரர் — திருமுறை: 7 பதிகம்: 95 பாடல்: 1
தலம்: திருக்கேதீச்சரம் — பாடஅலகு: வருடம் 1/12

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவுள்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமழு வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பு அணிவான் திருக் கேதீச்சரத் தானே. 1

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறைக் கீளுங்
கடமார்களி யானைஉரி அணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான் திருக் கேதீச்சரத் தானே. 2

அங்கத்துறு நோய்கள் அடியார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 5

வெய்யவினை யாயஅடி யார்மேல் ஒழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேற்
செய்யசடை முடியான் திருக் கேதீச்சரத் தானே. 6

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயும் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன் அடித் தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்தும் சொலக் கூடாகொடு வினையே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல் : 87 -வாழ்த்து – சம்பந்தர் தேவாரம்

பண் : கௌசிகம்
அருளியவர்: சம்பந்தர்
தலம்: பொது

பாடல் : வாழ்க அந்தணர்.. ..
திருமுறை: 3 பதிகம்: 54 பாடல்: 1
பாட அலகு: 1 – பிறபதிகம்5

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

## பாடல் : 88 - வாழ்த்து

பண் :
அருளியவர்: கச்சியப்ப சிவாசாரியார்
வேறு :

பாடல் : வான்முகில்.. ..
திருமுறை: கந்தபுராணம்
பாட அலகு: வரு 1 பிறபதிகங்கள் 5

திருச்சிற்றம்பலம்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற் தவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணுக்கு ஒரு பாடல்

'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

பயிற்சிநெறியில் கற்றவற்றில்

எளிமையான பாடல்களின்

ஒருமாதிரியை (sample) எடுத்து

பண்ணுக்கு ஒரு பாடலாகவும்

ஆலயங்களில் முக்கிய

நிகழ்வுகளில் ஓதும்

பாடல்களாகவும் தொகுத்து,

மூலப்பண் அமைப்பில்

சிறிதும் மாறாது

இசை ஆசிரியப் பெருந்தகைகளின்

குரலிசையிலேயே

பாடல்களின் ஒலிவடிவங்கள்

இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.



ISBN 978-624-98795-1-5

விலை 500.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org